ஜூலை 14 - ஓகஸ்ட் 14 2012-4 இது ஒரு மாத இதழ் விலை ரூபா 100/=

# தின மகுடி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VISGHA



**Importers & Dealers in Indian, Chines kuberan, photo Framing, Brass Item& All kind of Wedding gifts**

No : 145-P5
Andivel Street, Col - 11.
Tel: 0114894799
Fax: 0112447683
Web : www.visgha.com

No : 166, Sea Street,
Col-11, Tel: 0114893810
Rayan : Mob: 0772774776
E-mail: visgha@yahoo.com


அன்புள்ள ஆசிரியர் தின மகுடி

தங்களின் "தினமகுடி" சஞ்சிகையினை பார்த்தேன் வாசித்தேன் இலங்கையில் இப்பிடியான ஒரு மாத சஞ்சிகை வெளியாகிறதா? என்னும் அளவுக்கு பிரமாதமாகவுள்ளது. பக்கத்துக்கு பக்கம் வண்ணமயமாகவுள்ளது.

இதில் உள்ள அம்சங்கள் சிறியோர் முதல் பெரியோர் வரை பார்க்க ஆசையைத்தூண்டுகின்றது. இச்சஞ்சிகை இந்தியாவில் வெளியாகும் ஆனந்த விகடன்-குமுதம்-போன்ற சஞ்சிகையினை முந்தி விடும் அளவுக்கு பிரபலமாகவுள்ளது. ஒரு சிறு குறை அதாவது குறுக்கெழுத்துப்போட்டி ஆரம்பித்ததால் இன்னும் புதுப் பொழிவு பெறும். எனவே இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டும்.உங்கள் இச்சேவை தொடர எங்கள் பங்களிப்பு நிச்சயம் உண்டு.

k.l.அப்துல் றசூல்
நிந்தாவூர்-16, மட்டக்களப்பு

# வாசகர் இதயம் திறந்து

"தின-
மகுடியின் குரலோசை
நாடெங்கும் இசைக்கட்டும்"

கதாயுதத்தோடு கம்பீரமான சிவாஜியின் நிழல் படம் பதிவு செய்யப்பட்ட அந்த அட்டைப் படத்தோடு தற்செயலாக சந்திக்கிறது. ஒரு புத் தகம். உற்றுப் பார்க்கிறேன் தின மகுடி. ஆர்வம் மேலிட உள்ளே நகர்கிறது எனது பார்வை. முந் றுகிறது முரண்பாடு எனக்குள் அலுத்துக் கொண் டேன்.அரசியல் இதழாக இருக்குமோ சலித்துக் கொண்டே கவனம் உள்நுழைந்து நிலைத்து நின் றது. ஆம் இரும்பு பெண்மணி சூகி தொடர்பான தரவுகளோடு ஆர்வம் மெல்ல அணமித்தது.

பக்கங்களை வேகமாக தின்னத் தொடங்கினேன். ஒரு பல்சுவை இதழ் என்ற அந்தஸ்தின் வாயிலை தொட்டிருக்கிறது. பல களங்களை சந்திக்கின்ற இலக்கியங்களில் இலங்கையில் விரல் விட்டுடெண் ணக்கூடிய வற்றில் ஒன்றாக தினமகுடி இணைகிறது. இத்தனைக்கும் தற்செயலாக என் கைகளில் கிடைத்த படியால் விலை பற்றி அலட்டிக் கொள்ள வில்லை ஆனாலும் இலக்கியங்களை விலை கொடு த்து பெறும் கூட்டம் தமிழர் மத்தியில் சொற்பளவே. அச்சடிக்கப்பட்ட தாள்கள மனதைக் கவர்ந்தன தினமகுடி தினமும் வெளிவந்து மகிழ்விக்க எனது வாழ்த்துக்கள் இலக்கியங்கள் உருவெடுக்கப்படும் தமிழ் சமுதாயம் வளரட்டும்.

S.ஜெயபாலன்.
ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்.

தின மகுடி
மாத இதழ் வெளிவந்து சில மாத காலப்பகுதியினுள்ளே எம் போல பல வாசகர்களை கவர்ந்திருப்பது மிகவும் பெரு மைக்குரிய விடயமாகும்.

உள்நாட்டில் இதுபோல தரமான பத்திரிகை வெளிவந்திருப்பது வரவேற்க தக்க விடயமாகும். ஊடகத்துறையில் மிகுந்த ஆர்வமும் V.K.T.C கல்வி நிறுவனத்தை திறம் பட நடத்தி வரும் சகோ தரிகளும், மனித உரி மைகள் ஆணைக்குழுவின் பெண்கள் பிரிவில் அங் கத்தவர்களாக இருந்து வரும் V.புவனேஸ்வரி, A.சிவனேஸ்வரி ஆகிய நாங்கள் மனதார பாராட் டுக்களையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாத இதழாக வரும் தின மகுடி கூடிய விரைவில் வார இதழாக அவதாரம் எடுக்குமென ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

மேலும் உள்நாட்டு திறமை சாலிகளை இனங் கண்டு அவர்களது திறமையினை வெளிக் கொண்டு வரும், இதழாகவும், அரசியல் விடயங்களை அலசி ஆராயும் நடு நிலையான இதழாகவும் வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். எம் போன்ற வாசகர்களின் உள மார்ந்த வாழ்த்துக்கள்.

V.புவனேஸ்வரி, A.சிவனேஸ்வரி
V.K.T.C கல்வி நிறுவனம்
மட்டக்குளி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
14.07.2012

# தின மகுடி

## புதுவழி படைத்திட கூடுவோமே

தினமகுடி தனது நான்காவது இதழை தங்களிடம் முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகிறது. முன்னைய மூன்று இதழ்களுக்கு நீங்கள் வழங்கிய ஆதரவு எம்மை களிப்பில் ஆழ்த்துகின்றது.

வாசகர்களாகிய தாங்கள் வழங்கும் ஆதரவுதான் இந்த முயற்சியின் வெற்றிக்கான ஊன்றுகோல் என்பதை கருத்திற் கொண்டு மலர்ந்த இதழ்கள் குறித்து நீங்கள் முன்வைத்த கருத்துகளுக்கு மதிப்பளித்து சிலமாற்றங்களை மேற் கொண்டிருந்தோம். இன்னும் பல மாற்றங்கள் தேவை என்பதையும் நாம் அறி வோம் எனவே வாசகர்களாகி நீங்கள் தொடர்ந்தும் உங்களது கருத்துகளை எம்மோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

தினமகுடியின் விலைகுறித்து எமக்கு பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய வர்ண பக்க வடிவமைப்புகளுடன் தரமான அச்சுப் பதிப்பில் இதனை நாம் வழங்குவதாயின் அதற்கான விலை நிர்ணயம்தான் இதன் தற்போதைய விலை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

தமிழகச் சஞ்சிகைளை இதனை விட கூடியவிலையில் பெற்று படிக்கும் எமது வாசகர்கள் நம்நாட்டுப் படைப்பை ஒருபோதும் புறம்தள்ளிவிடமாட்டர்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது

எமது முயற்சி மேன்மேலும் சிறப்பதற்கு வர்த்தகப் பெருமக்கள் காட்டிவரும் ஆதரவு நன்றிக்குரியது. உங்கள் ஆதரவு தொடர்ந்து எமது முயற்சிக்கு வளம் சேர்க்க வேண்டும் என்பதை இவ்வேளையில் உரிமையோடு கூறிவைக்க விரும்புகிறோம்.

நம்நாட்டின் கலை, இலக்கியத்துறையில் பெயர் பெற்ற படைபாளிகள், ஆர்வலர்கள் பலர் இருக்கின்றனர் அவர்கள் தினமகுடி குறித்து அறிந்து தமது படைப்புகளையும் இதற்கு வழங்கி இம்முயற்சி சிறக்க ஒத்துழைப்பு நல்கவேண்டும் இதனை ஒரு வேண்டுகோளாக தங்களிடம் முன்வைக்கி றோம். உலகெங்கும் வாழும் தமிழ் படைப்பாளிகளின் படைப்புத்தளமாக தினமகுடி நிலைபெற வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். இந்த நோக்கம் உரிய இலக்கை அடைய உங்கள் கரங்களை எம்மோடு இணைத்துக் கொள்ளுங்கள்.

பேனாக் கைகளின் சங்கமம்
புதுவழி படைத்திட கூடுவோமே

**ஆசிரிய பீடம் தினமகுடி**
**இல. 238 கடற்கரை வீதி, கொழும்பு-11**

தொலை பேசி : 011 7209862
தொலைநகல் : 011 334633
**gmail thinamakudis@gmail.com**



## தினமகுடி கிடைக்கும் இடங்கள்

R.K.stores
141p1,Andival street
Colombo-11

Sivasakathi stores
226\3,p,andival street
Colombo-11

Poobalasingam book depot
340,sea beach street
Colombo-11

Sai book shop
No-92,Kotahena street
Colombo-13

Sivasakathi book center
54a mayfeiled road
Kotahena
Colombo-13

Vailankanni book shop
&music center
no-03,ginthupitiya street
Colombo-13

G.S.L.Grocery
No-
272,Messengers,Street
Colombo-12

Shankar book shop
wellawatta
vinshan book shop
wellawatta

Saravanas pharmacy
wellawatta

Eritto book shop
Bampalapitty

Jothi book shop
mannar

A.Sivaruban
11,Avenue Du Capitaine
Fonck 93150 Ie Balance
Mesnil
parise
France

A.Sivananthan
8 Lambs walk
Enfield,En 2 6nh
London

**அனைத்து மாவட்டங்களிலும் தினமகுடியைப் பெறலாம்**

**வாசகர்களே!**
உங்கள் வாசல் கதவைத் திறக்க தினமகுடி காத்திருக்கின்றது! இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்ன? தினமகுடியில் சந்தா உறுப்பினராக இன்றே இணைந்து கொள்ளுங்கள். வருடச்சந்தா 1000\=ருபாவை நீங்கள் செலுத்துவதன் மூலம் தினமகுடியோடு உங்களது உறவை உறுதிப்படுத்துங்கள். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவயுகம் படைப்போம் வாரீர்!



தலைநகரில் பல்வேறு அமைப்புகள். கட்சிகள் செயற்பட்ட போதும் வறுமை கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்துவதற்கான பணிகளை நவோதயம் அமைப்புகளின் தலைவர் எஸ்.கே கிருஷ்ணாவே மேற்கொண்டு வருகின்றார். இந்தப் பணிகள் எத்தனையோ குடும்பங்களின் வாழ்க்கைச் சுமைகளை குறைக்க பேருதவிபுரிகின்றன.

எனினும் இத்தகைய பணிகளை தமது அரசியல் லாபங்களுக்காக கொச்சைப்படுத்தி விமர்ச்சித்து மக்களின் எண்ணங்களை திசைதிருப்ப - கொழும்பில் தனித்துவம் பேசும் கட்சி ஒன்றின் மக்கள் பிரதிநிதி ஒருவர் முற்பட்டிருப்பது அவரது அரசியல் வங்குரோத்துதனம் என்பதை காட்டுகின்றது.

தானும் திண்ணாது திண்ணவரும் பசுக்களையும் திண்ணவிடாது வைக்கோற்போரை காவல் காக்கும் விலங்கின் நிலையில் நம்மில் சிலர் இருப்பது இவ்வாறான செயல்களுக்குச் சிறந்த உதாரணம்.

கடந்த பல ஆண்டுகளாக மக்களின் வாக்குகளை மட்டும் பெற்றுக் கொண்டு வெற்றிகளை பெற்றவர்கள் இந்த மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக எதனையும் செய்யாத போது தனியொருவராக எந்தவித எதிர்பார்ப்புகளும் இன்றி இந்த மக்களுக்காக உதவிகளை புரிந்து வருபவர் எஸ்.கே. கிருஷ்ணா.

கடந்த 5 ஆண்டுகளாக கட்டம் கட்டமாக அவரால் முன்னெடுக்கப்பட்ட அவ்வாறான உதவிப்பணிகள் தற்போது அதிக அளவில் இடம்பெற்று வருகின்றன. இப்பணிகளை பெற்றுக் கொண்ட மக்கள் இவரது சேவை தமக்கு தொடர்ந்தும் தேவை என்பதை உணர்ந்து அவரை அரசியலில் ஈடுபடுமாறு வலியுறுத்தி வந்தனர். இதன் பிரிதிபலிப்பாகவே நவோதயம் மக்கள் முன்னணி உதயம் கண்டுள்ளது.

மக்கள் விரும்பும் அரசியல் சக்தி ஒன்று உதயம் காண்டுள்ளதை பார்த்து பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் இப்போது நவோதயத்தின் பணிகள் தொடர்பில் விமர்சனங்களை அள்ளி இறைக்கின்றனர். இவர்களது கபட நாடகங்களை மக்கள் நிச்சயம் அறிவர்

இத்தனை காலமாக வாக்களித்த மக்களை மறந்துவிட்டு தமக்காக பணி செய்து கொண்டிருந்தவர்கள் இப்போது மக்களுக்காக உதவிகளை வழங்க முன்வந்திருக்கின்றனர். இவை கூட மேல்மாகாண சபை தேர்தலை எதிர்பார்த்து அவர்கள் நடத்தும் கூத்தாகவே கருதப்படுகிறது.

மக்களை மடையர்களாக நினைத்துக் கொண்டு நமது அரசியல்வாதிகள் செயல்படுவது ஆரோக்கியமானதல்ல தனக்கு வாக்களித்த மக்களின் பிரச்சினைகள் மண்டிக்கிடக்கும்போது அது பற்றி கவலை கொள்ளாது செயற்படும் அரசியல்வாதிகளிடம் இனியும் மக்கள் ஏமாறுவர்கள் என நினைப்பது முட்டாள்தனம் என்பதை அவர்கள் விரைவில் உணர்ந்து கொள்ளும் நிலைமை ஏற்படும்.

என்னிலையிலும் தமது பணிகள் தொடரும் என்ற வைராக்கியத்துடன் செயற்படும் மக்கள் தலைவராக நவோதயம் மக்கள் முன்னணியின் தலைவர் எஸ்.கே கிருஷ்ணாவை நான் பார்க்கிறேன். இவரது கரத்தைப் பலப்படுத்துவதன் மூலம் கொழும்பு வாழ் அணைத்து தரப்பு மக்களும் மேன்மையடையலாம் என்பதில் ஐயமில்லை.

**நவோதயத்தோடு இணைவோம்...**
**நவயுகம் படைப்போம் வாரீர்...**

அவரைப் பற்றி இவர்



ரவிப்பிரகாஷ்

# சூர்யாவுக்கு புதிய ஜோடி



கௌதம் மேனன் இயக்கத்தில் உருவாகும் துப்பறியும் ஆனந்தன் படத்தில், சூர்யாவுக்கு ஜோடியாக ப்ரணீதா நடிப்பார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

கௌதம் மேனன் சூர்யாவை வைத்து துப்புறியும் ஆனந்தன் என்ற ஆக்ஷன் படத்தை எடுக்கவிருக்கிறார்.

இதில் சூர்யா 40களில் உள்ள கெட்டப்பில் ரொமான்ட்டிக் டிடெக்டிவாக வருகிறார். அவருக்கு ஜோடியாக சகுனி படத்தில் கார்த்திக்குக்கு ஜோடியாக நடித்த பிரணீதாதான் நடிக்க விருக்கிறாராம்.

விஜயை வைத்து கௌதம் மேனன் எடுக்கும் யோஹான் முடிந்த பிறகு துப்பறியும் ஆனந்தன் படப்பிடிப்பு தொடங்குகிறது.

இந்த படம் வரும் 2013ஆம் ஆண்டு தொடக்கத்தில் வெளியாகும் என்று கூறப்படுகிறது.

சகுனி படத்தை அடுத்து நடித்தால் பெரிய கதாநாயகர்களுடன் மட்டும் தான் நடிப்பேன் என்று பிரணீதா கண்டிஷன் போட்டதாக கொலிவுட்டில் பேச்சாகக் கிடந்தது.

அவர் கண்டிஷன் போட்ட மாதிரி பெரிய கதாநாயகன் சூர்யாவுடன் தான் ஜோடி சேர்ந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் வேண்டாம் கறுப்பு ஜூலை

**இலங்கைத்தீவில் இரு இனங்களுக்கு இடையே என்ன நடக்கிறது என்று இந்த உலகம் புரிந்திராத, அறிந்திராத காலத்தே இலங்கையின் ஆட்சியாளர்களால், தமிழ் இனத்திற்கு எதிராக நடத்தி முடிக்கப்பட்ட கொடூரமான காட்டுமிராண்டித்தனமான இனச்சங்காரமே கறுப்பு ஜூலை.**

அன்றைய ஆட்சிபீடத்தினால் நன்கு திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட இந்தக் கொடுமைக்கு பல்லாயிரம் தமிழர்கள் பலியாக்கப்பட்டனர்.

தமது கடுமையான உழைப்பால் தமிழர்கள் சேர்த்து வைத்த வளங்களை, செல்வங்களை, சொத்துக்களை, காடையர்கள் கொள்ளையிட்டனர். தீவைத்து மகிழ்ந்தனர்.

தமிழ்மக்களின் பொருளாதார வளம் முற்றாக அழிக்கப்பட்டது. சொத்துக்களையும் சொந்தங்களையும் இழந்து, தென்பகுதியில் இருந்தும், மலையகப் பகுதிகளில் இருந்தும் தமிழர்கள், தமது தாயகம் நோக்கி அகதிகளாக விரட்டப்பட்டனர்.

எமக்கென்றோர் தாயகம் உண்டென்ற உண்மை வெளிப்பட்ட தருணம் அது. துன்பதுயரங்களுடன், உடல்காயங்களுடனும் மனக்காயங்களுடனும் வந்த தனது மக்களை, தமிழர் தாயகம், ஆதரவாய்த் தாங்கியது.

பல்லாயிரக்கணக்கானோர், இலங்கைத் தீவைவிட்டு, இந்தியாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் அகதிகளாக வெளியேறினர்.

வெலிக்கடைச் சிறையில் சிறைவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் ஐம்பத்திமூன்று பேர், சிறைச்சாலைக்குள் வைத்து இரண்டு கட்டங்களாக, மிருகத்தனமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழ் மக்களுக்கெதிரான இந்த வன்முறை வெறியாட்டத்திற்கு வித்திட்டுவிட்டு, வேடிக்கை பார்த்த அன்றைய அரசு, சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களின் சுயாதீனமான நீதி விசாரணைக் கோரிக்கைகளை முற்றாக நிராகரித்தது.

மாறாக, வெலிக்கடைச் சிறையிலும், ஏனைய பகுதிகளிலும், இனப்படுகொலையை முன்னின்று நடத்திய காடையர்களுக்கு, வீடுகள், வசதிகள் வழங்கி, தமிழர் தாயகப் பகுதியில் குடியேற்றியது

## 29

இருபத்தொன்பது ஆண்டுகளுக்குமுன், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கறுப்பு ஜூலைக் கொடுமைகளை தட்டிக் கேட்க மறந்த, சர்வதேச சமூகத்தின் பொறுப்பற்ற போக்கே, இன்று பன்மடங்கு கொடூரத்தை, கொடுமையை தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலிலும் அனுபவிக்க நேர்ந்தது.

கறுப்பு ஜூலையுடன் இலங்கையின் பேரினவாதக் கொடுமைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியை சர்வதேச சமூகம் இட்டிருந்தால், தமிழர்களுக்கு எதிரான கட்டற்ற வெறித்தனம் முள்ளிவாய்க்கால்வரை தொடர்ந்திருக்காது.

இன்றுள்ள அரசு, தனது திட்டத்தின் அடுத்த கட்டம் நோக்கி நகர ஆரம்பித்திருக்கின்றது. தமிழர் தாயகத்தை முற்றாக ஆக்கிரமித்து, தமிழ் இனத்தை முற்றாக சிங்களத்துள் கரையவைக்கின்ற திட்டத்துடன் அது தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

இராணுவ முற்றுகைக்குள் தமிழர் தாயகத்தை வைத்தபடி, தமிழ் மக்களின் மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களில் கைவைத்துள்ளது . பௌத்த மதத்திணிப்பை தீவிரமாய் மேற்கொண்டுள்ளது. சிங்களக் குடியேற்றங்களைத் தாராளமாய் மேற்கொண்டுவருகின்றது.

கறுப்பு ஜூலைகள் மீண்டும் இடம்பெறாமலும், முள்ளிவாய்க்கால்கள் தொடராமலும், தமிழர் தாயகத்தில், தமிழினம், தன் அடையாளங்களுடன், சுதந்திரமாக வாழுகின்ற ஒரு நிலைமையை உருவாக்கின்ற ஒரு காலமாக இக்காலம் அமைய தமிழர்கள் அனைவரும் தீவிரமாய் உழைக்க வேண்டிய காலம் இது.

தமிழ்மக்கள் மீதான இனஅழிப்புக்கொடுமைகள், சர்வதேச சமூகத்தால், இயல்பாகத் தட்டிக்கேட்கப்பட மாட்டாது

என்பதும்,தடுத்துநிறுத்தப்பட மாட்டாது என்பதும் கசப்பான வரலாற்று உண்மையாகும்.

இலங்கை வாழ் தமிழ்மக்களை சர்வதேச சமூகம் திரும்பிப் பார்க்க செய்யவேண்டிய பணிகளை நோக்கி நகரவைப் பதும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

ஒற்றுமையுடன் பரஸ்பர ஒத்துழைப்புடன், இலங்கை வாழ் தமிழ்மக்களுக்களின் விடுதலை வாழ்விற்காக பணியாற்றுவ தென்ற உள்ளார்ந்த உறுதிமொழிகளை, கறுப்பு ஜூலை கனத்த நினைவுகளுடன் மனங்களில் ஏற்றுக்கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் போட்டிகளால் சாதனை படைக்கும் லண்டன்

30ஆவது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் வரும் 27 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 12ஆம் திகதிவரை ஐக்கிய இராச்சியத்தில் உள்ள லண்டன் மாநகரத்தில் நடைபெறவிருக்கிறது. தற்கால உலக ஒலிம்பிக் விளையாட்டை மூன்றாவது முறையாக நடத்தும் பெருமையை லண்டன் மாநகரம் பெறுகிறது. 1908 மற்றும் 1948 ஆண்டுகளில் இருமுறைகள் இங்கு இவ்விளையாட்டுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

1944 ஆண்டு இங்கு நடக்கவிருந்த ஒலிம்பிக் போட்டிகள் இரண்டாவது உலகப்போர் காரணமாக ரத்து செய்யப்பட்டன. அதிகமுறை ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய நாடுகள் வரிசையில் இரண்டாவது இடம்பிடித்துள்ளது ஐக்கிய இராச்சியம். முதலிடத்தில் நான்கு முறைகள் (1904, 1932, 1984, 1996) ஒலிம்பிக் நடத்திய அமெரிக்கா உள்ளது. ஜேர்மனி (1936, 1972), ஆஸ்திரேலியா (1956, 2000), பிரான்ஸ் (1900, 1924), கிரீஸ் (1896, 2004) ஆகிய நாடுகள் தலா இரண்டு முறைகள் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தி உள்ளன.

இதுவரை லண்டன் (இங்கிலாந்து), லொஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா), பரிஸ் (பிரான்ஸ்), ஏதென்ஸ் (கிரீஸ்) ஆகிய நகரங்கள் தலா இரண்டு முறைகள் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தியுள்ளன. இம்முறை லண்டனில் நடைபெறவுள்ளமையால். அதிகமுறைகள் ஒலிம்பிக் போட்டிகள் நடத்திய நகரம் வரிசையில் முதலிடத்தைப் பிடிக்கவுள்ளது.

LONDON 2012

# வணக்கம்

லண்டனில் நடக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கான வரவேற்பில் வணக்கம் என முதன்முதலாக தமிழில் வரவேற்பு ஆரம்பிக்கப்பட்டமை வியப்பாக அமைந்துள்ளது. தமிழின் முக்கியத்துவத்தையும் அதன் வரலாற்றையும் சிறப்பிக்கும் பொருட்டு லண்டனில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான விளம்பரத்தில் வணக்கம் என தமிழ் மொழியுடன் ஆரம்பிக்கும் ஒலிம்பிக் வரவேற்பு விளம்பரம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கூட்டமாக நிற்கும் சிறுவர்களுள் தமிழ்ச் சிறுவன் ஒருவன் கையை உயர்த்திக்கொண்டு துள்ளியவண்ணம் வணக்கம் கூறுகையில் உண்மையில் புல்லரித்துத்தான் போகிறது.








*கேள்வி: பாம்பாட்டியாரே! ஒரு மூத்த இலக்கியவாதியிடம் தினமகுடி பற்றிக்கேட்டேன் 5 அல்லது 6 இதழ்கள் வரட்டும் பார்க்கலாம் என்கிறாரே ஏன்?*

**ராகவன் - கொழும்பு II.**

**பதில்:** ஒரு வேளை அனுபவ வெளிப்பாட்டின் க(ரு)த்தாக இருக்கலாம்... இலக்கிய உலகில் அதுவெல்லாம் சகஜமப்பா.

*கேள்வி: ஐயா... ஹெல்ப் மீ... இந்த ரி.வியில நாடக சீரியலை நிறுத்தனும் வழி ஒன்னு சொல்லுங்க....*

**லோகேஸ்வரன் - மட்டக்குளி**

**பதில்:** ரொம்ப பாதிக்கப்பட்டு இருக்கிறீங்கன்னு தெரியுது.. ஆமா உங்க சம்சாரம் எப்படி கராத்தே.. குங்பூ தெரிஞ்சவங்களாக.. இல்ல இப்படியொரு கேள்வியை கேட்டுப்புட்டீங்க அதுதான்.....

*கேள்வி: பாம்பாட்டியாரே! என் காதலர் அடிக்கடி பொய் சொல்லுகிறார் அவரைத் திருத்த வழியொன்னு சொல்லும்?*

**ராகிணி - பேலியாகொடை**

**பதில் :** சரியான ஆம்புளையைதான் பிடித்திருக்கிறீர் ஆமா என்னமாதிரியான பொய்களை எல்லாம் சொல்கிறார்ன்னு சொல்லவே இல்லையே எதுக்கும் விட்டுப்பிடியும் ஒருநாள்அடங்குவார்.

*கேள்வி:பாம்பாட்டியாரே நீர் அடிக்கடி பார் பக்கம் போறாதா சொல்றாங்களே நீர் ஓர் தண்ணீர் பிரியரா?*

**சந்திரன்- கொச்சிக்கடை.**

**பதில் :** தண்ணியை (அருவியிலிருந்து கொட்டும்) பார்க்கும் பிரியர்

*கேள்வி: மை டியர் பாம்பாட்டி! "ஒரு நாடு ஒரே மக்கள்" என்ற சிந்தனை கைகூடுமா?*

**கஸ்தூரி - தெஹிவளை.**

**பதில் :** தமிழர் தாயகம் எங்கும் புத்தரை ஊன்றும் கலாசாரம் தொடரும்வரை இது சாத்தியமற்றது.

*கேள்வி: ஒரு காதலனை கைவிட்ட கையோடு இன்னனொரு காதலனை பிடித்துக் கொள்ளும் பெண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?*

**வசந்தன்-பம்பலப்பிட்டி.**

**பதில்:** அட்ரா சக்க "ஒரு பூ வண்டாகிறது" என்று ஒரு மெகா சீரியல் எடுக்கலாமே.

*கேள்வி: ஐயா... உம்மிடம் ஒரு கேள்வி.. தனது பெயரில் இனிஷலைக் கொண்டுள்ள விலங்கினம் எது?*

**கார்த்திகா- வவுனியா.**

**பதில்:** கார்த்திகா உங்களுக்கு அழும்போது ஊளையிடும் பழக்கம் உள்ளதா.. இல்லையா அப்போ ஊளையிடும் விலங்கினத்தைத் தெரியுமா? உங்கள் கேள்விக்கு விடைகிடைத்திருக்குமே..

*கேள்வி: ஒரு பையனி அடிக்கடி என்னை பார்க்கிறான் என்ன செய்யலாம்?*

**அனுஷா -தெமட்டகொடை.**

**பதில்:** சின்ன பையனா.. பெரிய பையனா? எதுவுமே சொல்லமா இப்படி மொட்டையா கேட்டா எப்படி.

ஆமா.. பையன் கையில மொபைல் இருக்குமே நம்பரை கேட்டு சந்தேகத்தை தீர்த்துக் வேண்டியது தானே

*கேள்வி: பாம்பாட்டியாரே! மற்றவர்கள் படைப்புகளை தனது படைப்பாக பெயர் போட்டுக்கொள்ளும் படைப்பாளிகளை பற்றி என்ன நினைக்கிறீர்?*

**நந்தன்- மாங்குளம்.**

**பதில்:** தயவுசெய்து இவர்களை படைப்பாளிகள் என்று அழைக்காதீர்கள் வேண்டுமென்றால் மொள்ளமாரிகள் என்று அழைத்துக் கொள்ளுங்கள்.

*கேள்வி: பாம்பாட்டியாரே! கூட்டமைப்பினர் மூலமாக தமிழ்பேசும் மக்கள் இழந்த உரிமைகளை மீள பெற்றுக் கொள்ள முடியுமா?*

**ந.மரியநாயகம்- கொழும்புத்துறை(யாழ்).**

**பதில்:** இருப்பதை காப்பாற்றுவதே தர்மசங்கடமாக இருக்கும்போது... இழந்ததை மீளப்பெறுவது முயல்கொம்பே... ஆனாலும் அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கே...

*சிறந்த கேள்விக்கான 500 ரூபா பணப் பரிசை பெறுபவர்*

**கஸ்தூரி- தெஹிவளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பண்டா-செல்வா ஒப்பந்தம்

இலங்கை தமிழர்களின் வரலாற்றில் ஆழமாகப் பதிந்துவிட்ட ஒருமாதம் ஜூலை ஆகும். தமிழினம்

பல வரலாற்றுத் துன்பங்களையும் பாரிய வெற்றி-களையும் பெற்றுக்கொண்டது இந்த மாதத்தில் தான்.

1957 ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி தமிழரின் பிர-திநிதி தந்தை செல்வாவுக்கும் அன்றைய பிரதமர் பண்டாரநாயக்காவுக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. வரலாற்றில் "பண்டா - செல்வா ஒப்பந்தம்" என்று பெயர்பெற்றுவிட்ட இவ்வொப்பந்தம் பின்னர் சிங்களத் தரப்பால் நிராகரிக்கப்பட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வை தரக்கூடிய ஒன்றாக இந்த ஒப்பந்தம் இப்போதும் கருதப்படுகிறது.

1975 ஆம் ஆண்டு ஜூலை 27ஆம் திகதி விடுதலைப் புலிகளின் முதலாவது ஆயுத வழித்தாக்குதல் நடத்தப்பட்ட தினமாகும். யாழ் முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பா மீது நடத்தப்பட்ட தாக்குதலே அது.

கறுப்பு ஜூலை" என்று இன்றுவரையும் அழைக்கப்படும் இம்மாதத்தின் 23 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பாரிய திருப்புமுனை ஏற்படுத்திய திருநெல்வேலித் தாக்குதல் நடத்தப்பட்ட நாளாகும்.. 1983 இல் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் 13 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதற்கு அடுத்த நாளான ஜூலை 24 இல் கொழும்பில் தமிழர் மீதான இன அழிப்பு சிங்களக் காடையர்களால் நடத்தப்பட்டது. ஏறத்தாழ 3000 வரையான தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான பெண்கள் பாலியல் வன புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள். கோடிக்க ணக்கான தமிழரின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்த நாடுகளுக்கு "எங்கள் வேலை எங்களுக்குத் தெரியும்" என்று அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா பதிலளித்தார். மேலும் மிகப்பிரபல்யமான வாசகமான "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற அறைகூவல் ஜெயவர்த்தனவால் விடுக்கப்பட்டது ஜூலை இறுதியில்தான் ராஜீவ்-ஜே.ஆர் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது

2001ஜூலை 24 திகதி திகைப்பூட்டும் வகையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் உள்ள கடுமையான பாதுகாப்புக்களை எல்லாம் மீறி நுழைந்து 26 வர்த்தக மற்றும் போர் விமானங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் சேதப்படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## இதயமடி

மின்னும் இயற்கை எல்லாம்
உன்னழகைக் கூட்டுதடி!

தென்றலும் சிற்றிடைத் தழுவி
மௌன முகத்தினிலே
முத்தமிட்டுபோனதடி!

அன்னமும் நடை பழக
ஆணி திரண்டு நின்றதடி!

குயிலும் குரல் கேட்க
செவி மருத்து வந்ததடி!

வண்டுகள் தேன் எடுக்க
இதழோரம் ரீங்காரம்
போடுதடி!

நீ என்னை கடந்து செல்கையில்
நாடி நாளம் எல்லாம்
துளிர் விட்டு பல கிளைகள்
முளைக்குதடி!

என்னுள் நீ இருந்தால்
இரு இதயம் துடிக்குமடி!



ந.தமிழ்ச்செல்வன்



நம் ஆடைகளை சுத்தம் செய்வதை இலகுவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட சலவை இயந்திரம் தற்போது மிகச்சிறிய அளவில் வடி வமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது பை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. 180 கிராம் நிறையை கொண்டுள்ள இந்த சலவைப் பையானது இடத்திற்கு இடம் எடுத்துச்செல்ல முடியும் என்பது விசேட அம்சமாகும். இதில் ஓரே தடவையில் 2 தொடக்கம் 3 லீட்டர் வரையிலான நீரை பயன்படுத்த முடிவதுடன் சம்போ, சலவை தூள்கள் போன்றனவற்றை பயன்படுத்தி 20-40 செக்கன்டுகளில் சலவை செய்ய முடியும் விலை நிர்ணயிக்கப்படவில்லை எனினும் விரைவில் சந்தைக்கு வரும் என்கிறார்கள்.





OHEA எனும் ஸ்பெயின் நிறுவனம் இந்த மின் கட்டிலை உருவாக்கியுள்ளது. நித்திரையின் பின்னர் மறுநாள் காலை இக்கட்டிலின் போர்வைகள் எப்படி கசங்கியிருந்தாலும், தானாக சரிசெய்துவிடுகிறதாம்

50 செக்கன்களுக்குள் வேலை முடிந்துவிடுகிறது. தானாக இயங்குவதற்கும், மெனுவலாக இயங்குவதற்கும் இரண்டு பட்டன்கள் உள்ளன. Automatic ஐ அழுத்திவிட்டீர்கள் என்றால் படுக்கையை விட்டு நீங்கள் எழுந்த 3 செக்கனில் தானாக சரிசெய்ய ஆரம்பித்துவிடும்மாம்.

## களத்தில் நவோதயம்

நவோதயம் மக்கள் முன்னணி தனது அரசியல் பாதையில் அடி எடுத்து வைக்கின்றது. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாக இம்முறை போட்டியிடுகின்றது சேவைக்கு கைகொடுங்கள் உயர்வுக்கு மை இடுங்கள் நாளை நமதே!








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழம் என்பது இலங்கைத் தீவின் மறு பெயராகும். ஆனால் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துடன் ஈழம் என்றசொல் வடக்கு, கிழக்கை மட்டும் குறிப்பதாக மாறியது. இந்த மாற்றமானது தமிழர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்கான குறியீடாகக் கருதப்பட்டது.

# வால்பிடித்து வாய்ப்பெடுத்து வாழ வேண்டுமா?




தமிழர்களுக்கான உரிமை மறுப்பின் நீட்சியாக உருவான ஆயுதப் போராட்டம் இந்த தனித்துவத்தை மேலும் உறுதிப்படுத்தியது. "தமிழீழ" என்ற பெயரேந்தல்களுடன் உருவான ஆயுத இயக்கங்கள் இதற்குச் சான்று.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் ஏற்பட்ட .இனவாதச் சிந்தனை முதலில் கைவைத்த இடம், மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையாகும். தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றில் அதிகரித்துவிடக் கூடாது என்பதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையே ஒட்டு மொத்த தமிழ் இனத்தின் இன்றைய அவலத்துக்கு முதன்மை காரணி என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த நடவடிக்கைக்கு எதிராகத் தமிழினம் அன்று ஒற்றுமையுடன் போராடியிருக்குமாயின் தமிழர்களின் உரிமை குறித்த கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டிருக்கமாட்டா. தமிழர்கள் என்ற உணர்வை மறந்து பிரதேசரீதியான சிந்தனையுடன் செயற்பட்டமைக்கு கிடைத்த பாடமாகவே இதனை நாம் பார்க்க வேண்டும்.

இனவாதச்சிந்தனையின் வித்தாக 1948 இல் முளைவிட்ட பிரஜாவுரிமை பறிப்பு இலகுவாக வெற்றியளித்தமையை கருத்தில் கொண்டு ஒரு தசாப்த காலத்திற்குள் 1956 இல் தனிச்சிங்கள சட்டத்தின் ஊடாக தமிழ் மக்களின் உரிமை பறிப்பு ஆரம்பமாகியது. தொடர்ந்து தடியடிப்பு, சொத்தழிப்பு, சிறைப்பிடிப்பு, உயிர்பறிப்பு என அரங்கேறிய அநியாயங்கள் இன்று மண்பறிப்பு நிலையை தொட்டுள்ளன.

அதாவது, ஐம்பதிற்கு- ஐம்பது கேட்ட தமிழினம் இப்போ 13க்கும் மேல் (பிளஸ்) கேட்கும் நிலைக்கு வந்து காணிக்கும் வீட்டுக்கும் போராட வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. நாளை தண்ணீருக்கும் சுவாசிக்கும் காற்றுக்கும் கூட தமிழன் போராட வேண்டிய நிலைமை ஏற்படலாம். இத்தனைக்கும் பிரதான காரணமாக இருப்பது தமிழர்களிடமுள்ள ஒற்றுமையின்மையே.

ஒரு ஆயுத சக்தி முற்றாக அழிக்கப்பட்டு கேட்பாரின்றி - பார்ப்பாரின்றி தமிழினம் இன்று முழித்துப் போய் நிற்கின்றது. இந்த நேரத்திலும்கூட நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற உணர்வு எமது தலைமைகளின் தலைகளுக்குள் ஏறவில்லை என்பது தான் வேதனைக்குரியது.

பல தசாப்தங்களாக நாம் தொலைத்துக் கொண்டிருக்கும் ஒற்றுமையை மீண்டும் மீண்டும் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். அதன் நீட்சி தொடருமானால் இலங்கையில் தமிழர் தாயகம் என்ற ஒன்று இருந்ததற்கான அடையாளமே இருக்காது.



முள்ளிவாய்க்காலுக்கு பின்பான இன்றைய நிலையில் ஒவ்வொருவரிடமும் அடுத்தவர் மீது சொல்லிக் கொள்ள முடியாத பல சந்தேகங்களும் பயங்களும் நிறைந்ததாகவே தமிழர் அரசியல்வெளி இருக்கிறது. தமிழரின் விடுதலைப் போராட்டத்தை எதிரி கள் சிதைத்ததை விட எல்லோருக்குள்ளும் சந்தே கங்களையும் நம்பிக்கையீனங்களையும் விதைத்திருக் கிறார்களே அதுவே எதிரிகளின் பெரும் வெற்றியாகும்



இதனை எப்படி உடைத்தெறிந்து எமது இனம் முன்நகரப் போகிறது என்பதுதான் இன்றைய காலகட்டத்தின் ஏக்கமாகும்.

இத்தகைய நிலையில், முதலில் தமிழர்களின் தாயகம் காப்பாற்றப்பட வேண்டும். அதற்கான முழுமையான நடவடிக்கைகளில் தமிழ் மக்களின் அனைத்து அரசியல் தரப்புகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். தமிழர்களின் உணர்வு ரீதியான போராட்டங்களை திசை திருப்ப மேற்கொள்ளப்படும் தேர்தல் திருவிழாக்களை கண்டு குலைந்து போய்விடக் கூடாது, கட்டுப்பாடாக இதனையும் சந்திக்க வேண்டும். தேர்தல் வெற்றியை மட்டும் நோக்கமாக கொண்டு செயற்படும் எண்ணத்தை கைவிட வேண்டும் கைவிட தவறுவோரை இனங்கண்டு தமிழினம் அவர்களைக் கைவிட வேண்டும்.

அபிவிருத்திக்கும் வேலைவாய்புக்கும் சுயலாபங்களுக்கும் இனிமேலும் வால்பிடிக்கும் எண்ணம் தமிழர்களுக்கு வேண்டுமா என்பது குறித்த ஒவ்வொரு தமிழனும் மீள் பரிசீலனை செய்துகொள்ள வேண்டும். வாழ மண்ணே இல்லாமல் போகும் நிலையில் வால்பிடித்து வாய்ப்பெடுத்து வாழ வேண்டுமா என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்திக்கட்டும்.

நாம் தமிழர் நமக்கென்று ஒரு நிலம்முண்டு நமக்கென்று ஒரு வரலாறு உண்டு என்ற நிலையில் இலங்கை வாழ் தமிழ் மக்கள் தன் மானத்தோடு வாழ சகல அரசியல் தரப்புகளும் செயற்பட வேண்டும் இத்தகைய உணர்வின்றி செயற்படுவோர் எவராக இருப்பினும் அவர்களை நிராகரிக்க தமிழ் சமூகம் எக்காரணம் கொண்டும் தயங்கக் கூடாது

இந்த மண் எங்களுக்கும் சொந்த மண் என்ற உணர்வோடு வாழும் புதிய எழுச்சியொன்று தோன்ற சுவடுகளைப் பதிப்போமாக!

- பி.ஆர்.எம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தின மகுடியின் கவிதைப் போட்டி

தலைப்பு:- "தமிழனும் தமிழும்"
"நட்பு எதுவரை"
"தற்காலப் பெண்ணியம்"

**இத்தலைப்பினில் எதாவது ஒன்றைத் தெரிவு செய்து 20 வரிகளுக்குக் குறையாமல் எமக்கு எழுதி அனுப்பலாம்.**

- ❖ எக்கவிதை வடிவமாயினும் சரி மரபுக்கவிதை-புதுக்கவிதை
- ❖ வயதுக் கட்டுப்பாடு இல்லை
- ❖ நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது
- ❖ கூப்பனோடு வரும் படைப்புக்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

Win Prizes!

**பரிசு விபரம்**

**1 ஆம் பரிசு** – 10,000 /=
**2 ஆம் பரிசு** – 5000 /=
**3 ஆம் பரிசு** – 3000 /=
**ஆறுதல் பரிசுகள் இரண்டு. தலா** –1000/=
**பத்துப் பேருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

விண்ணப்பங்கள் சேரவேண்டிய இறுதித் திகதி:- 10.08.2012

*தினமகுடியின் பரிசு மழை கூப்பன்*

பெயர் : ....................................
விலாசம் : ....................................
....................................
அ.அ.இல : ....................................
தொ.பேசி இல. : ....................................

## சுயதொழில் ஆர்வலர்களுக்கு சந்தர்ப்பம்

சுயதொழிலில் ஈடுபடவிரும்பும் பெண் ஆர்வலர்களுக்கு உதவி வழங்கும் வகையில் நவோதயம் இளைஞர் அமைப்பின் ஊடாக தினமகுடி வழங்கும் பரிசளிப்பு திட்டம் இம்முறை அறிமுகமாகின்றது.

தினமகுடி மாத இதழில் வெளிவரும் இந்தப் பரிசுக் கூப்பனை பூர்த்தி செய்து வெட்டி அனுப்புவதன் மூலமாக வாசகர்கள் இப்பரிசைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிஷ்டசாலி ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்று பரிசாக வழங்கப்படவுள்ளது. ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம்.

## நவோதயம் வழங்கும் தினமகுடி பரிசு கூப்பன்

பெயர் : ------------------------------
முகவரி : ------------------------------
------------------------------
அ.அட்டை இல. : ------------------
தொ.பேசி.எண் : ------------------

திகதி : ................ கையொப்பம் : ....................

விண்ணப்பங்களை அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கவும்




## இன்றும் நாளையும்

அனைத்துலக தமிழ் மகா நாட்டில் தமிழ் இலக்கியமும் சமூகமும் இன்றும் நாளையும் என்பது பற்றி கட்டுரை எழுதுவது என்பது பூதத்தை பிடித்து பானைக்குள் அடக்கும் முயற்சியாகும். இலக்கியத்தின் ஒவ்வோர் பிரிவு பற்றி எழுதுவதாயின் அவையே பெரிய கட்டுரைக் கோப்புகளாக அமைந்து விடும். எனவே இலங்கை மற்றும் இலங்கையர் புலம் பெயர்ந்து படைக்கும் இலக்கியத்தின் ஆரோக்கியம் இன்றும் நாளையும் எவ்வாறு இருக்கின்றது அல்லது இருக்கப் போகின்றது என்பதனை பின்னிணைப்புகளுடன் கூடிய ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாக அன்றி நிஜ உலகின் தரிசனங்களை மட்டும் வைத்து அலசுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**நேற்று – இன்று – நாளை**

நாம் உண்ணும் ஒவ்வோர் அரிசியும் அரசியலால் நிர்ணயிக்கப்படுகின்றது என்பது போல எங்கள் இலக்கியமும் அரசியல் காரணிகளாலும் அதனைத் தொடர்ந்து தனி மனித விருப்பு வெறுப்புகளாலும் நிர்மாணிக்கப்படுகிறது. இதனை சுருக்கமாக புறச்சூழல் தனி மனிதனின் அகச்சூழலில் ஏற்படும் தாக்கத்தின் பிரதிபலனாக புனைவு இலக்கியங்கள் பிறக்கின்றன. தொன்று தொட்ட காலம் தொடக்கம் நடைபெறும் படையெடுப்புகள் அதன் பிரதிபலனாக சமூகத்தில் அல்லது தனிமனித வாழ்வில் ஏற்படும் அல்லது திணிக்கப்படும் மாற்றங்கள், அதனை உள்வாங்க அல்லது மறுதலிக்க அல்ல அதனுடன் இசைவாக்கமடைய மனித குலம் நிர்ணயிக்கப்படும் பொழுது புதிய வாழ்வியல்முறைகள் தோன்றுகின்றன. அந்த புதிய வாழ்வியலில் இருந்து புதிய இலக்கியங்கள் பிறக்கின்றன.

இதற்கு மிக நல்ல உதாரணமாக புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என ஒரு புதிய வடிவம் தோன்றியிருப்பதை சொல்லலாம். அல்லது முள்ளிவாய்க்கால் அவலத்திற்குப் பின்பு இன்று பெருமளவில் இலங்கையில் சரி, இந்தியாவில் சரி, மற்றைய நாடுகளில் சரி தோன்றியுள்ள பல புதிய வடிவங்களைச் சொல்லலாம். அதேவேளை முள்ளிவாய்க்கால் அவலம்வரை புலம் பெயர்ந்த நாடுகளில் தோன்றிய அல்லது அங்கீகரிக்கப்பட்ட இலக்கியங்கள் பக்கச்சார்புடமை கொண்டவையாகவும் அகுதில்லையாயின் அவை சாதிப்பிரதிஸ்டை செய்யப்பட்ட இலக்கியங்களாகவே அமைந்திருந்தன என்பதையும் மனவருத்தத்துடன் இதில் பதில் கொள்ளல் வேண்டும். இதே நிலை வடக்கில் இருந்து எழுந்த இலக்கிய வடிவங்கள் பற்றி தெற்கில் பேசமுடியாத நிலயும் தெற்கில் உருவாகிய இலக்கிய வடிவங்கள் பற்றி வடக்கில் பேச முடியாத நிலை இருந்தமையும் கண்கூடு.

கருத்துச் சுதந்திரமும் பத்திரிகை சுதந்திரமும் இல்லாமை நிலவிய அல்லது நிலவும் நாட்டில் இவ்வாறான இலக்கியங்கள் தான் தோன்ற முடியும். இதையும் தாண்டி இலக்கியம் படைக்க முற்பட்டோரின் இலக்கியங்கள் வாழுகின்றன. ஆனால் இலக்கியவாதிகளைக் காணவில்லை என்பதே வேதனையான விடயமாகும்.

புலம் பெயர்ந்த நாடுகளிலோ விரும்பியோ விரும்பாமலோ இலங்கையின் போர்க்கால அரசியலைமையப் படுத்தி பக்கசார்பு கொண்ட பத்திரிகளினால் தம்மை வெளிக்காட்டிக் கொண்டவர்கள் அல்லது பாம்பு தின்னும் ஊரில் நடுமுறி உண்ணவிரும்பியர்களின் எழுத்து வடிவங்கள் அரசியலநிலை மாறிய பொழுது அவர்களின் இலக்கியக் கொள்கைகளே அவர்களுக்கு விடமாக மாறி அவர்களின் திறமையையும் ஆர்வத்தையும் அழித்து விட்ட துர்பாக்கியமும் நேற்றைய -இன்றைய இலக்கிய வடிவங்களைப் பார்க்கும் பொழுது புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறான அரசியல் கொந்தளிப்புகளுக்கு இடையேதான் இன்றைய இலக்கிய உலகையும் நாளைய உலகத்தைப் பற்றிய கணிப்பீடையும் பார்க்க வேண்டி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேற்று – இன்று

நாளைய உலகத்தைப் பற்றி எதிர்வு கூறுவதற்கு முன்பாக நேற்றைய இலக்கிய உலகுடன் இன்றைய உலகை ஒப்பிடுதல் ஆரோக்கியமாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

வறுமையில் ஒரு பெண் வெயிலில் காயவைத்த "தீட்டுத்துணி" காயமுதல் ஈரத்துடன் கட்டிக் கொண்டு செம்மொழி மாகாநாட்டு ஊர்வலத்தை தாண்டியபடி அவசர அவசரமாக பள்ளி செல்லுதலை கவிதை நடையிலும், இன்னோர் பெண் வன்னியில் தன் பாவாடையை கிழித்து "தீட்டுத்துணி"யாக பாவித்ததையும் கிழிந்த பாவாடையுடன் நிற்கும் மகளை தாய் சந்தேகிக்கும் கொடுமையை சிறுகதைவடிவில் இன்றைய இலக்கியம் பாடு பொருளாக முன் வைக்கும் பொழுது அது எந்த வகையிலும் புதுமைப் பித்தனின் பொன்னகரத்தில் காட்டப்பட்ட வறுமையை விட குறைவாகத் தோன்றவில்லை. இவை இரண்டுமே வறுமையின் வெளிப்பாடே, ஒன்று சமூக அமைப்பு கொடுத்த வறுமை. மற்றது போர் கொடுத்த வறுமை. இரண்டுமே வலிக்கின்றது. புதுமைப்பித்தனின் வண்டிக்காரன் மனைவி சோரம் போன பொழுது புதுமைப்பித்தன் என்ற ஆசிரியர் வெளியே வந்து "கற்புக் கற்பு என்கின்றீர்களே. இதுதான் ஐயா பொன்னகரம்" எனச் சொல்லி சமுக அமைப்பின் மீது தன் கோபத்தை சொல்லி வண்டிக்காரன் மனைவிக்காக அனுதாபத்தை வேண்டி நிற்கின்றார். ஆனால் இன்றைய இரு பெண்களையும் படைத்த ஆசிரியர்கள் தங்களை வெளியில் காட்டாமலே அந்த அனுதாபத்தை அப்பெண்களுக்கு பெற்றுக் கொடுக்கின்றார்கள்.

போர் என்று வரும் பொழுது பெண்கள் சிறைப்பிடிப்பு, மானபங்கப்படுத்தல், கற்பழிப்புகள், விதவைப் பெண்களின் பெருக்கம், அதனை ஒட்டிவரும் கலாசாரப் பிறழ்வுகள் என்பன அன்றைய இலக்கியங்களில் இருந்து அவை இலக்கியங்களுக்கு ஒரு அழகியயலைக் கொடுத்துக் கொண்டிருந்த பொழுது இன்று பக்கத்துக் கிராமத்தில் அல்லது அண்டை வீட்டில் நடக்கும் ஒரு நிகழ்ச்சியாக அவை வேதனையை அள்ளிக் கொடுக்கிறது. நிஜம் வயிற்றில் புளியை வார்க்கின்றது. கற்பனைக் கதைகளோ என எண்ணிய அன்றைய கதைகள் இன்றைய நிஜவாழ்வில் நடைபெறும் பொழுது "யாவும் கற்பனை அல்ல" என முடிவுரை போடத் தேவையில்லாத புனைவு இலக்கியங்கள் எங்கள் மத்தியில் பெருகிக் கொண்டு வருகின்றது.

மேலும் இதிகாசங்கள் காப்பியங்கள் வழிவந்த எம் புனைவு இலக்கியங்களில் மனிதரின் பாத்திர படைப்புகள் வெள்ளை கறுப்பு என கோடுபோட்டுக் காட்டப்பட்டே வந்தது. இராமனுள் சீதையைச் சந்தேகித்த ஒரு கணவனும் இராவணுள் ஒரு சிவபக்தனும் இருந்த பொழுதும் பத்தினி விரதனான இராமனும் பிறன்மனைவயைக் கவர்ந்த இராவணனும் தான் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டனர். இவற்றையே நேற்றைய பல கதைகளிலும் நாவல்களிலும் காணக்கூடியதான இருந்தது. ஆனால் இந்த நிலை மாறி வெள்ளையும் கறுப்பும் கலந்த மானிடர்களின் தோற்றுவாய்கள் இன்றைய பல இலக்கியங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக உடல்பசியைத் தீர்ப்பதற்கு கோயிலில் திருடிய பணத்துடன் பரத்தையின் வீட்டிற்கு செல்லும் ஒருவன் அவள் தாலிகட்டியிருப்பதைப் பார்த்ததும் அவளின் கையில் பணத்தைக் கொடுத்து விட்டு திரும்பிச் செல்வது போன்ற மனிதாபிமானம் மிக்க பல பாத்திரங்கள் இன்றைய புனைவு இலக்கியங்களில் வருதல் பெரும் ஆரோக்கியமே. இப்பிடிச் செய்ததினால் கோயிலில் திருடிய பாவம் கழுவப்பட்டு விட்டதா என பல பழைமை வாதிகள் கோசம் போட்டார்கள். இங்கு பாவ விமோசனம் அல்ல கருப்பொருள். ஒரு திருடனுக்குள் மறைந்து கிடந்த மனிதாபிமானம் - அவ்வளவே.

மொத்தத்தில் புனைவு இலக்கியங்கள் என்பன வாசகனை கனவுலகத்தில் சஞ்சரிக்கும் நிலையில் இருந்து மாற்றி நிஜ உலகின் இயக்கங்களுடன் உலாவ விட்டிருப்பது தான் இன்றைய இலக்கியத்தின் சிறப்பு எனக் கருதலாம். இந்த புத்துணர்வு தமிழிற்கு முன்பாக பிற மொழிகளில் அதிகமாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இன்றைய தமிழ் இலக்கிய சஞ்சிகைகளில் பெரும்பான்மையாக இடம் பெற்றிருப்பது தமிழ் இலக்கியத்திற்கு கிடைத்த கௌரவமே.

பாடல்கள் வடிவில் அல்லது காப்பிய வடிவில் இருந்த இலக்கியவடிவங்கள் பாரதி காலத்தில் எளிமை நடைப் படுத்தப்பட்டிருந்த போதிலும் சிறுகதை நாவல்களை பார்க்கும் பொழுது (gffk 47 I ghuff)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திகில்

இலைகளைத் துறந்து நிர்வாணத்திற்கு வெட்கப்பட்டு பனியைப்போர்வையாக போர்த்திக் கொண்டிருந்த மரங்களையும் செடிகளையும் ரசித்தபடியே புது வருடக் கொண்டாட்டங்களுக்கு தயராகிக் கொண்டிருந்தது சுவீடன். அதன் தென்பகுதி நகரான கார்ல்ஸ்ஹாம்ன் நகர சாலை ஒன்றில் மோகனுடன் நான் நடந்து கொண்டிருந்தேன்

"கார்த்தி, இன்னக்கி நைட் புதுவருட பார்ட்டியை கல்லறையில வைச்சுடுவோமா என்றான் மோகன்

நான் எதுவும் பதில் பேசவில்லை. எங்கள் வீட்டில் இருந்து சில நூறு மீட்டர் தூரத்தில் இந்தக் கல்லறை இருக்கிறது. இதனை நாங்கள் கடந்து கொண்டிருக்கும்பொழுதுதான் மோகன் இந்தக் கேள்வியைக் கேட்டான். குறிப்பிட்டக் கல்லறைப்பகுதியை வழமையாக கடக்கும்பொழுது மனதில் ஒருவித அச்சம் பரவும் அந்த உணர்வு மீண்டும் எட்டிப் பார்த்தது.

போன வருடம் நடன கேளிக்கை விடுதிக்குச் சென்று ஏகத்துக்கும் ஆட்டம் ஆடியது போல இந்த வருட ஆரம்பத்தையும் கொண்டாடலாம் என்பதுதான் எனது எண்ணமாக இருந்தது.

"ஏதாவது பப்க்கு போகலாமே" என்றேன் நான்

"வித்தியாசமா டிரை பண்ணுவோம். உருளைக்கிழங்கு மாதிரி இருக்கிற இவளுகளைத் தடவி தடவி போரடிச்சுடுச்சு போச்சு" என்றான் மோகன்

போனவருடம் அம்முவிடம் நடன விடுதிக்குப் போக அனுமதி வேண்டி கெஞ்சிய கெஞ்சல்கள் கொஞ்சல்கள் நினைவுக்கு வந்து தொலைந்தது. யாரையும் தொடாமல் ஆடுவேன் என சத்தியம் செய்த பிறகே அலைபேசியில் முத்தத்துடன் அனுமதியும் வந்தது அவள் இப்போதும் ஊரில்தான் இந்தப் புதுவருடத்தில் இருந்து வித்தியாசமாக எதையும் செய்ய பழகவேண்டும் யோசித்திருந்தேன். நினைவுகள் ஓடியபோது மறித்தான் மோகன் என்ன பயமா?

"பயம்னு எதுவும் இல்லை, எதுக்கு அநாவசிய ரிஸ்க். சின்ன தடுமாற்றம் கூட பெரிய டேஞ்சர்ல கொண்டு வந்து விட்டிடும், எனக்கு இந்த ஐடியா தோதாப்படல" என்றேன்

"கமோன் கார்த்தி. இத்தனை வருஷம் மனுசங்களோட கொண்டாடினோம் ஒரு வேளை பேய். பிசாசு இருந்தா அவங்களோடயும் சேர்த்துக் கொண்டாடுவோம்"

பக்கத்து அறை நண்பர்களில் சிலரும் மோகனின் கல்லறைக் கொண்டாட்டத் திட்டத்தை அங்கீகரிக்க எனக்கும் வேறுவழியில்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. கோழிக்கறி வருவல்கள், மீன் குழம்பு, இரண்டு வோட்கா போத்தல்கள், பெரிய கேன் வைன், இருபது முப்பது பீர் டின்கள், வீடியோ கேமிரா என ஆறு பேர் குளிருக்கு ஏற்புடைய ஆடைகளுடன் கல்லறை பகுதிக்கு ஏற்கனவே இருந்த அரை போதையுடன் கிளம்பிவந்து சேர்ந்தோம். மையமாக ஓரிடத்தில் பனிப்படலத்தைத் துப்புரப்படுத்தி விட்டு மதுபானக் கொண்டாட்டங்கள் ஆரம்பிக்க, எனக்கு பேய் பயத்தை விடவும் மரித்தோர் துயில் உறங்கும் இடங்களை அவமதிப்பதாக எங்களைப் பொலிஸ்பிடித்துபோய் விடுவார்களோ என்ற பயம்தான் மனதைக் குடைய ஆரம்பித்தது.

குடிபோதையில் நண்பர்கள் ஒவ்வொருவராக ஒரு கல்லறையின் மேல் படுத்துக் கொண்டு வீடியோவும் புகைப்படமும் எடுத்துக் கொள்ளும்பொழுதெல்லாம் அவமரியாதை செய்கின்றோமே என்ற குற்ற உணர்ச்சியை ஆல்ஹால் சமன் செய்தது.

தேவாவின் கானாப்பாடல்களுக்கும் இளையராஜவின் குத்துப்பாடல்களுக்கும் ஒழுங்கற்ற ஆட்டம் பாட்டம் அரங்கேறிக்கொண்டிருந்தபொழுதுதான் மோகன் ஆடிக் கொண்டிருந்த கல்லறையின் பின்னாள் இருந்த மரத்தில் இருந்து ஒரு சுவிடிஷ் ஆள் வர எனக்கு தூக்கி வாரிப்போட்டது. இரண்டு நண்பர்கள் மயங்கியே விழுந்தனர்.

"ரிலாக்ஸ் கய்ஸ் ஐயம் ராபர்ட் நீல்ஸ்ஸான்" என அந்த உருவம் அறிமுகப்படுத்திக்கொண்டது. வழக்கமான பேய்களுக்கான அடையாளங்கள் எதுவும் இல்லை. கால்கள் இருந்தன. கண்களில் அன்பான பொலிவு இருந்தது.

"பயப்படாதீர்கள் நான் பேயோ பிசாசோ அல்லை" என்ற ராபர்ட் நாங்கள் வைத்திருந்த விஸ்கி பாட்டிலை எடுத்து ஒரு மடக்கு குடித்து விட்டு எங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகள் கூறினான். சரியாக நள்ளிரவு 12.00 ஆகி இருந்தது.

மயங்கி விழுந்த நண்பர்களை தெளிய வைத்து எழுப்பி ராபர்ட்டையும் எங்களுடன் கொண்டாட்டத்தில் இணைத்துக் கொண்டோம்.

"இவன் சிவிலில் வந்த பொலிஸா இருக்குமோ" என மோகனின் காதில் கிசுகிசுத்தேன்.

"நீங்க எப்படி இந்த நேரத்தில" என ராபர்ட்டிடம் கேட்டதற்கு, தான் ஒரு விஞ்ஞானி எனவும் கல்லறையின் அமைதி அவனுக்குப்பிடித்து இருப்பதாகவும் வாய்ப்பு கிடைத்தால் இங்கேயே ஒரு வீடு கட்டி இருக்க விரும்புவதாகவும் சொன்னான். காலத்தைக் கட்டி நிறுத்துவது மரணம் மட்டுமே மரணத்தையும் காலத்தையும் ஆராய்ச்சி செய்பவன் ஆதலால் அடிக்கடி இங்கு வருவதாக சொன்னான்.

"உங்களுக்கு கேர்ள்பிரண்ட்ஸ் இருந்தா அவங்களையும் கூட்டிட்டு வந்து இருக்கலாமே" என்றேன் நான்

அடுத்த வருடம் அவர்களையும் இங்கே எதிர்பார்க்கின்றேன் என்று சொல்லியபொழுது எனக்குத் தோன்றிய அமானுஷ்ய உணர்வு அவன் தனது காரில் எங்களை வீட்டில் விடுவதாக சொல்லியபொழுது விலகியது.

இடையில் நான் ராபர்ட்டுடன் எடுத்தப் புகைப்படங்களைச் சரிப்பார்த்துக்கொண்டேன், அனைத்திலும் அவன் உருவம் பதிவாகி இருந்தது. பிரச்சினையில்ல. இவன் பேயாக இருக்க முடியாது. வேண்டுமானால் பொலிஸாகாவோ அல்லது எங்களைப்போல வெற்று சுவாரசியத்திற்காக இங்கு வந்திருப்பவனாக இருக்கக்கூடும் என முடிவு செய்தேன்.

அனைவரும் அவன் காரில் ஏறிக்கொண்டோம். சில நிமிடங்களில் வீடு வந்து சேர்ந்திடும் பயணம் ஏனோ அதிக நேரம் பிடிப்பதைப்போல எனக்குத் தோன்றியது. ஒரு வேளை ராபர்ட் சுற்றுப்பாதையில் போய் கொண்டிருக்கலாம் அல்லது அதிக குடிபோதை நேரத்தை மெதுவாகசெலுத்திக் கொண்டிருக்கலாம். ஒருவாறு தங்குமிடத்துக்கு வந்து சேர்ந்தோம் .

எல்லோரும் இறங்கிக்கொண்டு அவனுக்குப் புத்தாண்டு வாழ்த்து சொல்ல அவனும் "ஹேப்பி நியு இயர் " என சொல்லிவிட்டுப்போனான்.

காலை மெல்ல எட்டப்பார்த்தது முதல் வேலையாக மின்னஞ்சல்களைப் பார்த்தேன். அனைவரும் புதுவருடத்திற்கு வாழ்த்துகளைச் சொல்லி இருந்தார்கள். செய்தி இணையதளங்களைப் பார்த்தேன்

பிரபல இயற்பியல் இளம் விஞ்ஞானி ராபர்ட் நீல்ஸ்ஸான் புத்தாண்டு கொண்டாட்டங்களை முடித்துக்கொண்டு திரும்புகையில் கார் விபத்து ஒன்றில் பலியானார் எனவும் அவர் கடைசியாக காலப்பரிமாணத்தில் முன்பின் நகர்தல் பற்றிய ஆராய்ச்சிகளை செய்து கொண்டிருந்தார் எனக்குறிப்பிடப் பட்டிருந்தது.

இணைய தளத்தின் முகப்பைப் பார்த்தேன் ஜனவரி 1 2010 எனப்போட்டிருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு பின் ஒருவன்... தூக்கிவாரிப்போட்டது மோகன் என்று கத்தினேன் எமது அலறல் கேட்டு ஓடிவந்த பக்கத்து அறை நண்பர்கள் கணனியை பார்த்து அதிர்ந்து போய் உறைந்தனர். ■

ஆக்கம்: செல்வா (சுவீடன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வாழ்வதற்கே

சந்திப்பு: வை.கஜேந்திரன்

அன்று மாலையில் புத்தக விற்பனை நிலையம் ஒன்றில் எமது படைப்பான தினமகுடி மூன்றாவது வெளியீட்டின் விற்பனை நிலையை அறிய சென்றிருந்தபோது பெரிய மனிதர், பெயரில் மாற்றம் செய்ய வேண்டும் பல விதமாக கேள்விகளோடு விமர்சனம் செய்து கொண்டு இருந்தார். சற்றுக் கோபத்துடன் அருகில் நின்றவரிடம் யார் இவர் என்று வினவினேன் இவரைத் தெரியாதா பிரபல எண்ணியல் பெயரியல் வாஸ்த்து தேசிய விருது பெற்ற ஜோதிட நிபுணர் என்றார். மெல்லிய புன் னகையோடு தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக் கொண்டேன்.பிறகென்ன தினமகுடி வாசகர்களே உங்களுக்காக அவரின் இல்லத்தில் எமது குழுவினர் விஜயம் செய்தனர். அங்கு நாம் சென்றி ருந்தபோது வரிசைக் கிரமமாக கையில் பற்று சீட்டோடு மக்கள் சென்று கொண்டு இருந்தனர் திடீரென வெளியே வந்தவர் எங்களைக் கண்டதும் வாருங்கள் என அன்போடு வரவேற்றார் குளிர் பாணத்தோடு ஆரம்பமானது சந்திப்பு.

**தங்களைப்பற்றி ...**

எனது பெயர் மருதை பத்மராஜன் மலையகம் டிக்கோயா ஹட்டன் hiden college கல்வி பயின்றேன். தற்போது குடும்பமாக கொழும்பு மட்டக்குளியில் வசிக்கிறேன்

**இத்தொழிலுக்கு வரக் காரணம்...**

வீட்டுச் சூழல் பொருளாதார கஸ்ரம் சமுதாயப் பின்னணி என்பன என்னை துரத்த உயர்தரக் கல்வியை இடையில் நிறுத்தி விட்டு சிறு வயதிலே வெளி நாடு பயணமானேன் பல நாடுகள் மலேசியா சவுதி அரேபியா இந்தியா போன்ற இன்னும் பல நாடுகள் பத்தொன்பது வருடங்களின் பின்பு எமது நாட்டுக்கு திரும்பினேன் வெளிநாட்டில் வாழ்ந்த காலப் பகுதியில் சேது பண்டிற்ராமன் போன்ற இன்னும் பல ஜோதிட நிபுணர்களின் நூல்களைப் பயின்றதன் மூலமும். குறிப்பாக எனது தாத்தா மொட்டையன் கவுண்டர் கைரேகை பார்ப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தார் வாகனம் விலையான காலத்திலே எனது தந்தைக்கு வாகனம் வாங்கிக் கொடுத்திருந்தார் என்றால் பாருங்களேன். அதன் பிறகு எனது அப்பா மொட்டையன் மருதை எங்கள் ஊரில் அப்பாவுக்கு மரியாதை என்ன செய்வதென்றாலும் அப்பாதான் ஆரம்பித்து வைப்பார் ஊரில் இருந்த செல்வாக்கும் மதிப்பும் என்னை இத்தொழிலுக்கு ஈர்த்தது எனலாம்.

**உங்களிடம் எந்த வகையான மக்கள் வருகிறார்கள்...**

நல்லதொரு கேள்வி. என்னிடம் எல்லா மதத்தினரும் வருகிறார்கள். பொதுவாக வேலையில்லாப்பிரச்சினை. காதல் தோல்வி, திருமணமின்மை, தங்களின் வாழ்வில் மாற்றம் வேண்டும் விரும்பியதைப் பெறவேண்டும் செழுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வழிதேடியே வருகிறார்கள் குறிப்பாக இந்துக்களும் பௌத்தர்களும் தொடர்ந்து வருகிறார்கள்.

**பெயரியல் என்றால் என்ன...**

இப்பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு உயிருக்கும் பொருளுக்கும் பெயர் உண்டு அப்பெயரை வைத்தே அழைக்கின்றோம்.



மருதை பத்மராஜன்

பெயர் என்றால் இடம் பெயர்ந்தன். அசைகிறது நகர்கிறது இந்த அசைவுகள் நம்முடைய ஒவ்வொரு பெயரிலும் எழுத்திலும் உள்ளது அவ்வெழுத்துக்களின் நன்மை தீமைதனை உணர்ந்து ஒளி அலைகளை மாற்றம் செய்து கிரகங்ளின் நிலைகளை மாற்றி நல்ல நேரத்தில் கற்கள் அணிதலும் திசைகளில் தலைவைத்து படுத்தலும் அந்தக் கிரகத்துக்கு உண்டான நாட்களில் நல்ல காரியங்களை தொடங்குதல் போன்றவற்றின் மூலம் நன்மையை பெற்றுக் கொள்வதுதான் பெயரியல்.

**ஜோதிடம் என்றால்...**

ஜோதிடம் ஜோதி-இடம் இந்த அண்டத்தில் கிடைக்கின்ற ஒலி அலைகளை அவருக்கே பெற்றுக் கொடுத்தலும் புரியவைத்தலும் தான் ஜோதிடம்.

நவக்கிரகங்கள் ஒன்பதும் மனிதனிடத்தில் உள்ளது அதுதான் அவையத்தில் காணப்படுகின்ற ஒன்பது துவாரங்கள் ஒவ்வொரு கிரகத் திற்கும் ஓசையுண்டு.

ராகு கேது ஜாதகம் ராசி பலன் சுக்கிரன்-வக்கிரம் சூரியன்-உச்சம் சனி-உச்சம் எட்டில் செவ்வாய் போன்ற சந்தேகங்களை தீர்த்து வைப்பதுதான் இந்த ஜோதிடம்.

**இதுவரை எதாவது சாதித்தது உண்டா...**

பெருமைக்காக சொல்ல வில்லை இதுவரை என்னிடம் ஜோதிடம், வாஸ்த்து பார்க்க வந்தவர்களில் திருமணமாகாமல் இருந்த இருபாலருக்கும் திருமண பொருத்தம் பார்த்து இதுவரை 275ஜோடிக்கு திருமணம் செய்து வைத்துள்ளேன். இப்படி பல பணிகள் உள்ளன.

**மனிதனின் வாழ்வில் அதிஷ்ட்டம் தேவைதான...**

எந்தவொரு மனிதனும் ஆசை கொள்ளாமல் இல்லை ஆசையில்லாதவன் மனிதன் அல்லன். நினைத்தது நடந்துவிட்டால் புதிதாக ஒன்றை நினைக்கிறான் இதுதான் மனித இயல்பு இதுவரை சந்தித்தவர்களின் அனுபவத்தோடு தெரிந்து கொண்ட விடயம். மனிதன் நல்லதொரு நிலையை அடைய வேண்டும் என்றால் அவனுக்கு கட்டாயம் அதிஷ்ட்டம் வேண்டும் அதிஷ்ட்டம் என்பது உருவம் இல்லாதது அதை உங்கள் பெயரில் வைத்துக்கொள்ளலாம்.

**திருமணமாகியும் குழந்தை கிடைக்காதவர்கள் பெயர் மாற் றம் செய்தால் குழந்தைப் பாக்கியம் கிடைக்குமா...**

ஆம்! உதாரணமாக RAVINTIRAN, SANKEETHA இவ்வாறு உள்ள பெயரை SRUTHI இவ்வாறு மாற்றம் செய்ய வேண்டும். (U-என்பது பெண்ணின் கருப்பையை குறிக்கும்) கணவனுடைய பெயரோடு மனைவியின் பெயர் எழுத்து ஒத்துப்போனால்தான் கணவனுடைய விந்தினை சுமக்க முடியும்.இவ்வாறு தான் 26ஆங்கில எழுத்தில் உள்ள ஒலியமைப்பிற்கு ஏற்ப மாற்றியமைத்தல் மேலும் சில உதாரணம்-ரமேஷ்வரன்-ராமேஷ்வரம் சன்னியாசிகள் வாழும் இடம் இப்பெயரை பரமேஷ்வரன் என்று மாற்றினால் எல்லா சுக இன்பங்களையும் பெறுவார் பரமேஷ்வரன் என்றால் சிவபெருமான் அல்லவா அதுபோல தயா-உதயா என்றும் மலம் என்பது கழிவுப்பொருள் அல்லவா அதைக்கூட எல்லோரும் விரும்படி மாற்றியமைக்கலாம். கமலம் என்றால் தாமரை எவ்வளவு அருமையானது பார்த்திர்களா.

**தப்பாக எண்ணவேண்டாம்! உங்களை சாமி என்று அழைப்பதோடு மட்டுமல்லாமல் கைகூப்பி வணங்குவதும் காலை தொட்டு வணங்குவதும் கையில் முத்தம் செய்வதும் பார்க்கறேன். இந்தளவுக்கு உங்கள் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை பக்தி ஆனால் என்னை பொறுத்தவரையில் மனிதனை மனிதன் வணங்குவதா இதற்காண விளக்கத்தை தரமுடியுமா...**

நீங்கள் கேட்பது உண்மையான ஒன்று எனக்கும் சில வேளை சங்கடமாகத்தான் இருக்கிறது.இருப்பினும் அவர்களின் நம்பிக்கை அது இருந்தாலும் உங்கள் கேள்விக்கு விரிவான விளக்கம் தரவிரும்புகிறேன்.ஒரு சின்ன குழந்தைக்கு வருத்தம் வந்து விடுகிறது அக் குழந்தையை பல மருத்துவர்களிடம் காட்டுகிறீர்கள் சரி வரவில்லை உங்கள் சாமியாரோ துறவியோ பாதிரியாரோ அவரிடம் கொண்டு செல்கிறீர்கள் அவர் செபித்தோ தியானித்தோ பெருவிரலால் தொட்டு ஆசீர்வதிக்கிறார் அந்த நிமிடமே குழந்தை சுகமடைகிறது. நிங்கள் உடனே இவர் கைராசியானவர் என்கிறீர்கள் இதோ இதற்கான சரியான பதில் ஆம் ராசியானவர் தான் மனிதனுடைய காலையோ கையையோ தொடுதல் அழுத்தி தொடும் போது இருவருக்குள்ளும் காந்த அலைகள் பரிமாற்றம் பெறுகிறது. சூரிய காந்த அலைகள் ஆன்ம ஒளியின் மூலம் பரவுகிறது. விபூதி பூசுதல்ஆசிர்வாத நீர் பருகுதல் மூலம் ஒருவரை தொடுதல் மூலமும் அவரிடம் இருந்து சக்திகளைப் பெற்றுக் கொள்கிறோம். என்பதுதான் உண்மை.

**இலங்கையில் ஜோதிடம் என்பது மலையகம் மற்றும் மட்டக்களப்பு போன்ற இடங்கள் பிரபலமானவை உங்களைப் போன்றவர்கள் இலங்கையில் இருக்கின்ற போது ஏன் இந்தியாவில் இருந்து ஜோதிடக்கலைஞர்கள் வாஸ்த்து நிபுணர்கள் இங்கு வந்து செயலாற்றுகிறார்களே...**

ஆம் உண்மைதான் நம் வீட்டில் குழந்தை நன்றாகப்பாடினால் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதேநேரம் பக்கத்து வீட்டு பிள்ளை பாடினால் பாராட்டுகிறோம். வரவேற்கிறோம் அதே போல்தான் இதுவும். என்னைப்போன்றவர்கள் நிறையவே இலை மறை காயாக உள்ளனர் குறை கூறவரவில்லை யாராக இருந் தாலும் இருக்கும் இடத்தில் இருந்தால் தான் சிறப்பு என நினைக்கிறேன்.

**ஜோதிடத்திற்கும் வாஸ்த்துவிற்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன...**

ஜோதிடம்-திடப்படுத்தல் ஒன்பது கிரகங்களின் கணிப்புத்தான் ஜோதிடம்-வாஸ்த்து சொத்துக்களை சேர்த்தல் பெற்றுக் கொள்ளல் ஒன்பது கிரகங்களின் ஆட்சி புரிதல் பஞ்சபூதங்கள் நீர், மண், காற்று, தீ, வான் இயங்கவைப்பதுதான் வாஸ்த்து. உலகத்தின் சுழற்சியை தண்ணீர் மண்ணிலசேர்ந்து-மரம் முளைத்து காய்ந்து நெருப்பாகி காய்ந்த மண்ணாகி-இரும்பாகி இயந்திரமாகிறது.

தண்ணீர்-தொழில் மண்-அறிவு மரம்-முன்னேற்றம் நெருப்பு-பணம் சுகம் முன்னேற்றம் காய்ந்த மண்-குடும்ப நிம்மதி சந்தோஷம் இரும்பு-எதிர் கால திட்டம் காற்று-உதவி செய்யும் மனிதர்கள் இந்த சுழற்சியை (வாஸ்த்து முறைப்படி) வீட்டில் அமைத்தால் நலமாக வாழலாம்.

**எண்ணியல், பெயரியல் ஜோதிடம் வாஸ்த்து இந்த நான்கு துறையிலும் எதாவது புதிதாக கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டா?**

அருமையான கேள்வி ஒருவரின் பிறந்த திகதியை வைத்து அவரின் ஜாதகத்தையே சொல்லி விடுகிறார். இந்த துறைகள் ஒவ்வொன்றுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. PLAN-NET-கிரகம் PLAN திட்டம் NET-வலையமைப்பு எமது ஒவ் வொருவரினதும் திட்டங்கள் எண்ணங்கள் வலையமைப்பில் இணைந்து உள்ளது.எல்லாவற்றுக்குமே தொடர்பு உள்ளது. இந்த (airtel dialog mobital sim cards ) போட்டு கதைக்கிறார்கள் காற்றை வித்து பணம் சம்பாதிக்கிறார்கள் அந்த சிம் காட்டைப்போல் உலகத்தில் எப்பாகத்திலும் உள்ள மக்களின் குறைகளை துன்பங்களை கேட்டறிந்து தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான முறையினை தேடிக் கொண்டிருக்கிறேன் கிடைக்கும் என நம்புகிறேன் நம்பிக்கை தானே வாழ்க்கை.

**தின மகுடி இதழ் பற்றிய தங்களின் கருத்து...**

பார்த்தவுடன் இந்தியா சஞ்சிகை என்று நினைத்துதான் வாங்கினேன் பார்த்தால் இலங்கையில் இருந்து இப்படியொரு சஞ்சிகையா அந்த வியப்புக்கு விடைதான் தினமகுடி. மகுடி ஊத ஊதத்தான் பாம்பு ஆடும் அது போல நல்ல விடயங்களை திரும்ப திரும்ப சொல்ல வேண்டும் உங்கள் சேவை எங்களைப்போன்ற கலைஞர்களுக்கு தேவை இவ்விதழ் நிகரில்லாத வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாமர் எனக்கு ஒத்துவராது



இந்த மாதிரி ஒரு மருமகள் கிடைச்சா நல்லா இருக்கும் என்று இன்றைய மாமியார்கள் கேட்கும் அளவிற்கு அனைவரின் நெஞ்சங்களிலும் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருப்பவர் அழகு ஸ்ரீஜா. மதுரையில் தொடங்கி இன்றைய முந்தானை முடிச்சு, சரவணன் மீனாட்சி வரை ஹோம்லியான கேரக்டர்களின் அழகாய் ஸ்கோர்செய்து வருகிறார் ஸ்ரீஜா. சரவணன் மீனாட்சியில் பிஸியாக இருந்த அவரிடம் பிஸியான சீரியல் வாழ்க்கைப் பற்றி கேட்டோம்.

நான் இங்கு டிவி சீரியலுக்கு வருவதற்கு முன்பே சினிமாவுக்கு வந்துட்டேன். நடிக்கணும், நடனம் ஆடணுங்கிற ஆர்வத்தில ஸ்கூல்ல மூன்றாவது படிக்கும் போதே கிளாசிகல் டான்ஸ் கத்துக்கிட்டேன். ஐந்தாவது படிச்சிட்டிருந்தப்ப, மலையாள சினிமாவில் நடிக்க வாய்ப்பு கிடைச்சது. பத்தாம் வகுப்பு படிச்சிட்டிருந் தப்ப மீண்டும் பட வாய்ப்புகள் கிடைச்சது. கிருஷ்ணன் கோவில் கிருஷ்ணா, சகோதரன் சகோதரி, வால் கண்ணாடி படங்களில் நடிச்சேன்.

சுவாமி ஐயப்பன் படத்தில நடிச்சிட்டிருந்தப்ப மதுரை சீரியலுக்கு டைரக்டர் ஜெரால்டு ஹீரோயின் தேடிட்டிருந்திருக்கிறார். அப்ப என்னோட போட்டோவை சுவாமி ஐயப்பன் படத்தயாரிப்பார் கார்த்திகேயன் டைரக்டர் ஜெரால்டிடம் காட்டியிருக்கிறார். பார்த்த டைரக்டர் இதே மாதிரி பெண்தான் நான் நினைச்சிருக்கிற கேரக்டருக்கு பொறுத்தமாயிருப்பாள்னு சொல்லியிருக்கார். மதுரை சீரியலில், நடிக்க அழைப்பு வந்தது.

சினிமாவை விட சீரியலில் நடிப்பது பிடிச்சிருந்தது. நடிச்சிட்டிருக்கேன். மலையாளத்திலும் தமிழிலும், சினிமா வாய்ப்புகள் வந்தன. அவுங்க கேட்ட தேதிகளில்,சீரியல் சூட்டிங் இருந்ததால, ஏத்துக்க முடியாம போச்சு. மற்றபடி சினிமாவில் நடிப்பதில், எனக்கு ஏதும் பிரச்சினையில்லை.

மதுரைதான் என்னோட முதல் சீரியல். அதிலேயே எனக்கு தமிழக மக்களிடம் நல்ல அறிமுகம் கிடைச்சது. இப்போது முந்தானை முடிச்சு, சரவணன் மீனாட்சின்னு எனக்கேத்த கதை அமைஞ்சிருக்கு.

சூட்டிங் ஸ்பாட்ல, ஷாப்பிங் செல்கிற இடங்கள்ல,என்னை அடையாளம் கண்டுக்கிட்டு நலம் விசாரிக்கிறாங்க. யூத்கேர்ள்ஸ் சிநேகமா பேசுறாங்க. ரொம்ப சந்தோஷமாயிருக்கு. என்னதான் கதாநாயகியாக அனைவருக்கும் பிடித்த மாதிரி நடித்தாலும் வில்லியாக நடிக்க எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால் என் முகமும், தோற்றமும் பார்ப்பதற்கு ரொம்ப சாந்தமாக இருப்பதால் வில்லி கேரக்டர்கள் எனக்குக் கொடுக்க மறுக்கிறார்கள் சின்னதிரை இயக்குநர்கள் என்று வருத்தப்பட்டு சொன்னார் ஸ்ரீஜா.

அதேபோல் நிறைய பேர் கிளாமராக நடிப்பீர்களா என்று கேட்கிறார்கள். எனக்கும் கிளாமருக்கும் செட் ஆகாது. வருவாய் கிடைக்கிறது. புகழ் கிடைக்கிறதேன்னு மற்றவங்க முகம் சுளிக்கும் அளவுக்கு நடிக்க மாட்டேன். என்னை பார்க்கிறவங்க சிநேகமா மரியாதையா பேசற அளவுக்கு பேசப்படும்னு நான் நினைக்கிற படி கேரக்டர் அமைந்தால் மட்டுமே, நடிப்பேன்.

என்னோட உடல் வாகிற்கு கிளாமர் கேரக்டரெல்லாம் ஒத்து வராது. பணம் கிடைக்கிறது,புகழ் கிடைக்கிறதுன்னு நினைச்சு இஷ்டத்திற்கு நடிக்க என்னால் முடியாது. நல்ல கேரக்டராக இருந்தால் நடிப்பேன். பிடிக்காத கேரக்டரில் எவ்வளவு கொடுத்தாலும் நடிக்க மாட்டேன் என்று உறுதியாக சொன்னார் ஸ்ரீஜா.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
4.07.2012


புத்தம் புதிய டிசைன்களில் நவநாகரிக ஆடைகளுக்கு
NAIDU MAHAAL
www.naidumahaal.lk
SPECIALIST IN
Wedding &
Home Coming Saree,
Shalwar,
Gents & Kidswear
No. 52, W.A. Silva Mawatha, Colombo-06
Tel: 011 2588664, Email: naidumahaal@yahoo.com

# மிருதங்கத்தோடு நான்

சந்திப்பு: வை.கஜேந்திரன்

**தினமகுடி அஞ்சல் தொகுப்பில் இருந்து இம்முறை இவ்விதழை அலங்கரிப்பவர் தாள லய ஞானி கலைவாருதி மிருதங்க சக்கரவர்த்தி விரிவுரையாளர் கட்புலன் பல்கலைக்கழகம் கொழும்பு இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபன கலைஞர் பழனிவேல் பிரமநாயகம் அவர்கள்**

**தினமகுடிக்காக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. முதலில் உங்களைப் பற்றி...**

கொழும்பு மாநகரிலே 1950 ஆண்டில் இராமசாமி பழனிவேல் சந்திராம்பாள் அவர்களுக்கு மகனாக பிறந்த நான் சிறு வயது முதலே எனக்கு மிருதங்கம் கற்கவேண்டும் என்ற ஆர்வமிகுதியால் கோயில்களில் நடைபெறும் பஜனைகள் இசைக்கச்சேரிகள் அனைத்தையும் தவறாமல் முதல்வரிசையில் இருந்து பார்த்து விடுவேன்.எனது தந்தையிடம் கேட்டு வாங்கிய அப்போது வெளியான ரைசிங்-வானொலிப் பெட்டியோடுதான் எனது நேரம் கழியும்.

**இத்துறைக்கு நீங்கள் வரக் காரணமானவர் யார்?**

எனது ஆர்வமிகுதியைக்கண்டு எனது மைத்துனர் இலங் காமணி பிச்சையப்பா அவர்கள், நான் முறையாக மிருதங்கம் பயில வேண்டும் என்று கலாசூரி தம்பையாப் பிள்ளை ரத்தினம் அவர்களிடமும் பின்பு மேலதிகமாக பயில கலாபூசனம் ஆறுமுகம்பிள்ளை சந்தானக் கிருஸ்ணன் அவர்களிடமும் பயிலவைத்தார். எனது வளர்ச்சிக்கு உறு துணையாக இருநத்வர்கள் இன்னும் பலர் உள்ளார்கள்.

**இத்துறையில் உங்கள் வளர்ச்சி எவ்வாறானது?**

குருக்கள் மூலம் ஆரம்ப பயிற்சியை பெற்றுக்கொண்ட நான் கல்வி பொதுசாதாரண பரீட்சையிலும் வடஇலங்கை சங்கீத சபையால் நடாத்தப்படும் மிருதங்கப் பரீட்சையில் சித்தியடைந்தேன். மிருதங்கம் பயின்ற காலத்தில் குருவானவர்களோடு இசைக்கச்சேரிகள் மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளில் கெஞ்சிரா வாசித்து பயிற்சி பெற்றேன் இந்தக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள இராமநாதன் கல்லூரியில் இசைப் பேராசிரியராக இருந்த இந்தியக்கலைஞர் சித்தூர் சுப்பிர மணியப்பிள்ளை அவர்களுக்கு கெஞ்சிரா வாசிக்க கிடைத்தது. எனது கலைவளர்ச்சிக்கு ஒருபடியாக அமைந்தது எனலாம். பின்பு 1972ஆம் ஆண்டு இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடந்த கலைஞர் தேர்வில் தெரிவாகி 1978இல் வாத்தியக் கோஸ்டி கலைஞராகவும். 1988ஆம் ஆண்டு நிரந்தர கலைஞராகவும்1990 ஆண்டுவாத் தியக் கோஸ்டி உதவித்தலைவராகவும் நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் பணியாற்றி 2005 ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் இருந்து ஓய்வு பெற்றேன்.



**உங்கள் வளர்ச்சியில் இலங்கை ஒலிபுரப்புக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு?**

மிக அருமையான கேள்வி எனது இசைத் துறைக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தாயும் தந்தையுமாகும் அங்கு சென்றபின்புதான் இலங்கை, இந்திய கலைஞர்களுக்கும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளுக்கும் அரங்கேற்றங்களுக்கும் பல்வேறுபட்ட இசைசிகழ்வுகளுக்கும் மிருதங்கம், கெஞ்சிரா, டோல்கி வாசிக்கும் சந்தர்ப்பமும். வாயினால் கொன்னகோல் சொல்லும் சந்தர்ப்பமும் பல்வேறுபட்ட அனுபவங்களும் கிடைத்தன.

**உங்களுக்கு கிடைத்த கௌரவமும் விருதும் பற்றி சொல்லுங்கள்?**

இலங்கை வானொலியின் 75ஆவது பூர்த்தி விழாவிலும் இந்திய கலாசார நிறுவனத்தால் சிறந்த கலைஞராகவும் கௌர விக்கப்பட்டேன். தாள லய ஞானி, கலைவாருதி, மிருதங்க சக்கரவர்த்தி, லய ஞான செல்வன் போன்ற விருதுகளும் மிகவும் சிறப்பம்சமாக சென்ற வருட 100 ரூபா நாணயத்தாள் வெளியீட்டிற்கு மாதிரி உருவ மிருதங்க கலைஞராக இருந்த மையும் ஜனாதிபதி மாளிகையில் நடந்த பொங்கல் விழா நிகழ்ச்சியில் வீணை இசைக்கு மிருதங்கம் வாசித்தமையும் தாமரைத்தடாகம் திறப்பு விழா நிகழ்வில் மிருதங்கம் வாசித் ததையும் பெருமையாக கருதுகிறேன்.

**இத்துறையை கற்பதற்கான ஆர்வமுள்ள மாணவர்களுக்கு தாங்கள் கூற விரும்பும் ஆலோசனைகள் என்ன?**

இலங்கையில இசைக் கல்லூரிகளான வடஇலங்கை சங்கீத சபை, இராமநாதனன் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம், விபுலானந்தர் கல்லூரி-மட்டகளப்பு, களனி பல்கலைக்கழகம் மற்றும் கட்புலன் பல்கலைக்கழகம்-கொழும்பு என்பன உள்ளன. இதில் மிருதங்க பாடநெறிகள் உள்ளன. இதனை பயில விரும்புவோர் கட்டாயமாக கர்நாடக சங்கீதம் எல்லோரும் படிக்க வேண்டும் அப்போது தான் பஞ்சரத்தின கீர்த்தனைகள் ஒதுக்கம் சதுக்கம் 8 தகதிமி என்றால் 32மாத்திரை கணக்குகள் மற்றும் தாளத் துக்கு முன்னுக்கு அதிதீ தாளத்துக்கு பின்னுக்கு உள்ள விட யங்களை புரிந்துகொள்ளலாம். அதோடு கல்வி அறிவும் அவசியம். அவரவர் திறமைக்கு ஏற்றால் போல் ஆர்வமுடன் கற்றலும் முறையாக வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படுகின்ற பரீட்சையில் கைப் பயிற்சி தனியர்வத்தன பயிற்சி இடத்துக்கு ஏற்றாப்போல் வாசிப்பு, பாட்டுக்கு வாசிப்பு என பல படிகளை கற்று தேர்ச்சி பெற வேண்டும்.

**இசைக்கச்சேரியில் பக்கவாத்தியம் தானே மிருதங்கம் இதன் பங்களிப்பு என்ன?**

தேவ வாத்தியம் என்றும் தாளவாத்தியத்தில் முதன்மையான வாத்தியமாக மிருதங்கம் போற்றப்படுகிறது. மிருதங்கமும் வயலினும் தான் இசைக்கு முக்கியமானது எனலாம். உடும்புத்தோலால் செய்யப்பட்ட-கெஞ்சிரா மண்ணினால் செய்யப்பட்ட-கடம் சுதி ராகம் தாளம் பின்பற்ற வேண்டும் தாளத்தை காலப்பிரமாணத்தோடு இசையை சோர்வடையாமல் கொண்டு செல்வது மிருதங்கம்தான். அசுர வாத்தியம் நட்டுவ மேளம். மிருதங்கத்தின் ஓசையமைப்பை அறிவதற்கு தற் போது மீற்றர் பாவிக்கிறார்கள் நான் அன்று முதல் இன்று வரை கல்லுக்கட்டை வைத்து ஒலியை ஏற்றுதல் இறக்குதல் ஒரேமாதிரியான (நம்) எனும் சத்தம் வர வேண்டும் அனுபவம் மூலம் சரி செய்கிறேன். எல்லா இசைக் கருவிக்கும் தாய் சரஸ்வதி தேவி கையில் வைத்திருக்கும் வீணைதான் அது தெய்வம் வைத்திருப்பதால் வந்த பெருமை.



**இத்துறையினால் கிடைத்த பலனும் உங்களது எதிர்கால ஆசையும் என்ன?**

இன்று என்னை அடையாளப்படுத்தியது மிருதங்கம்தான் நான் கலைக்குடும்பமாக வாழ்ந்து கொண்டிருப்பதும் இத்துறையால்தான் எனது ஆசையெனும் போது இந்தியாவுக்கு சென்று சிறிது காலமாவது இந்தியக் கலைஞர்களோடு சேர்ந்து இசைசிகழ்ச்சிகள் செய்ய வேண்டும். எமது பெயர் சொல்ல வேண்டும் ஒரு கலைஞன் தான் வாழ்ந்த காலத்தில் சாதனையை நிலைநாட்ட வேண்டும் தான் கற்ற கலையை பிறருக்கு கற்று கொடுப்பதின் மூலம் நிலை பெற்று வாழ்வான் எங்கிருந்தாலும் எமது திறமையின் இனம் காட்ட வேண்டும்.

**தின்மகுடி பற்றி தங்களின் கருத்து?**

இவ்வளவு காலம் இத்துறையில் இருந்தாலும் எந்தச் சஞ்சிகையையும் நான் முழுமையாக வாசித்ததில்லை நான் முற்றுமுழுதாக வாசித்த சஞ்சிகை என்றால் அது தினமக்குடி தான் எங்களைப் போன்ற திறமையான கலைஞர்களை வெளிக் கொண்டு வருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

## நம்பிக்கைதானே வாழ்க்கை

நாம் இளவயதில இருந்து கேட்ட கதைதான் ஆமையும் முயலும் கதை. இந்தக் கதையை வேறு சில கோணங்களில் மாற்றியமைத்து பார்ப்போமா? முயல் தோற்று போனதையிட்டு வெட்கம் அடைந்தது. சுய ஆராய்ச்சி செய்து கொண்டது. அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கையும் அதனால் காரியம் ஆற்றுவதில் ஏற்பட்ட தொய்வும் தான் தோல்விக்கு காரணம் என்பதை உணர்ந்தது. அதனால் ஆமையை மீண்டும் போட்டிக்கு கூப்பிட்டது.

ஆமையும் ஒப்புக் கொண்டது. இம்முறை முயல் முழுத் தூரத்தையும் ஓரே சமயத்தில் ஓடி ஆமையை வென்றது. இதனால் கிடைக்கும் நீதி "இடைவிடாத முயற்சியும் வேகமான செயல் திறனும்-நிச்சயம் நிலையான மெதுவான செயல்பாட்டை வெல்லும்" அடுத்து முயலைப்போலவே ஆமையும் வேறுவழிகளில் யோசனை செய்தது. இந்தமாதிரிப் போட்டியில் தன்னால் முயலை கண்டிப்பாக வெல்ல முடியாது என்பதை உணர்ந்தது. நன்கு ஆராய்ந்து வேறொரு பாதையில் இதே போல் போட்டி வைத்துக் கொள்ளலாம் என முயலைக் கூப்பிட்டது. முயலும் ஒப்புக் கொண்டது வழக்கம் போல் முயல் வேகமாக ஓடியது.ஆனால் இடையே அகன்ற ஆறு ஒன்று குறுக்கிட்டது. அதைத்தாண்டி சில மைல்கள் ஓடினால்தான் போட்டியில் வெல்ல முடியும். ஆற்றைக் கடக்கும் வழியறி யாது. கரையில் முயல் உற்கார்ந்தது விட்டது. ஆமை மெதுவாக வந்து ஆற்றை நீந்திக் கடந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதனால் கிடைக்கும் நீதி தம்முடைய தனித்திறமையை உணர்ந்து. அறிந்து அதற்கேற்ற முறையில் விளையாடு களத்தை மாற்றியமைத்துக் கொண்டால் வெற்றி நிச்சயம்.

முயலும் ஆமையும் இப்போது நண்பர்களாகி விட்டன இருவரும் சேர்ந்து. யோசிக்க ஆரம்பித்தனர் இருவரும் சேர்ந்து ஒரே குழுவாக செயல்பட்டால்.வெற்றி இலக்கை விரைவில் வெற்றிகரமாக அடைய முடியும்.என்று கண்டனர் எப்படி? நிலப் பகுதியில் முயல் ஆமையை முதுகில் சுமந்து வேகமாக ஓடியது.

ஆற்றை அடைந்ததும் ஆமையின் முதுகில் முயல் அமர்ந்து கொள்ள ஆற்றை கடந்தது. மீண்டும் கரையில் முயல் ஆமையை சுமந்து சென்று வெற்றி இலக்கைத் தொட்டனர் இருவரும் சேர்ந்து செயல்பட்ட விதத்தில் இருவருக்கும் மிக்க மனத்திருப்தியும் மகிழ்ச்சியும் இரட்டிப்பானது. இதனால் கிடைக்கும் நீதியானது தனித்திறமைகள் இருந்தாலும் ஒரு குழுவாக இணைந்து செயல் பட்டால் பலன் பல மடங்காகும். இக்கதையில் இருந்து நமது வாழ்க்கைக்கு தேவையானதைப் புரிந்து கொண்டோமானால் எத்துறையிலும் வெற்றிக் கனியைப் பறிக்கலாம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. அல்லவா நம்பிக்கை தானே வாழ்க்கை

J.கௌரி–பொகந்தலாவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நலம் தரும் விரல் முத்திரைகள்

என்.கணேசன்

அடுத்த இதழிலும் தொடரும்....

தெய்வங்களின் சிலைகளையும், திருவுருவப் படங்களையும், மற்றும் மகான்களையும் கூர்ந்து பார்ப்பவர்கள் அவர்களுடைய கைவிரல்கள் ஏதாவது ஒரு முத்திரை நிலையில் இருப்பதைக் காணலாம். துவக்கத்தில் இந்து மதத்திலும், புத்த மதத்திலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட இந்த முத்திரைகள் உடல் நலத்திற்கும், மன நலத்திற்கும் பெரிதும் பயனளிப்பதாக இருக்கின்றன.

விரல் முத்திரைகளை யோகா மற்றும் தியானக் கலைகளில் பயன்படுத்தும்போது கிடைக்கும் பலன்கள் பல மடங்காக இருப்பதாக பயன்படுத்தி பலன் கண்டவர்கள் கூறுகிறார்கள்.

இது குறித்து பல ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, பல நூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. சில முக்கியமான எளிய முத்திரைகளையும், இலகுவாக செய்யக் கூடிய இவற்றைச் செய்வதனால் ஏற்படும் பலன்களையும் சற்று பார்ப்போம்.

## ஞான முத்திரை

கையின் பெருவிரல் நுனியையும், ஆட்காட்டி விரலின் நுனியையும் இணைக்கையில் இந்த முத்திரை கிடைக்கிறது. மற்ற விரல்கள் நேராக நிறுத்தப்பட வேண்டும். பெரும்பாலான தியான நிலைகளில் இந்த முத்திரை பயன்படுத்தப்படுகிறது. நினைவு சக்தியை அதிகரிக்கவும், கவனக்குறைவைக் குறைக்கவும், மன அமைதியை அதிகரிக்கவும் இந்த முத்திரையைப் பயன்படுத்தலாம். தொடர்ந்து பயன்படுத்துபவர்கள் ஹிஸ்டீரியா, மன அழுத்தம் போன்றவற்றிலிருந்து பெருமளவு விடுபடலாம் என்று சொல்லப்படுகிறது.



## வருண முத்திரை

பெருவிரல் நுனியையும் கடைசி விரல் நுனியையும் இணைக்கையில் வருண முத்திரை ஏற்படுகிறது. மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும்.

உடலின் நீர்சமநிலை மாறுமானால் அதனால் ஏற்படும் தீய விளைவுகளை இந்த முத்திரை தடுக்கிறது என்று சொல்கிறார்கள். இரத்த சம்பந்தமான வியாதிகளைப் போக்கவும்,தோல் சுருக்கத்தைப் போக்கவும் கூட இந்த வருண முத்திரை உதவுகிறது என்கிறார்கள்.



## சூன்ய முத்திரை

கையின் நடுவிரலை பெருவிரலின் அடியில் உள்ள மேட்டில் வைத்து அந்த விரலைப் பெருவிரலால் லேசாக அழுத்தியபடி வைத்துக் கொள்ளும் போது சூன்ய முத்திரை ஏற்படுகிறது. மற்ற விரல்கள் நீட்டப்பட்ட நிலையிலேயே இருக்க வேண்டும்.

இந்த முத்திரை முக்கியமாக காது வலியையும்: மற்ற காது சம்பந்தமான குறைபாடுகளையும் போக்க உதவுகிறது. -



## ப்ராண முத்திரை

கையின் மோதிர விரலையும், கடைசி விரலையும் மடக்கி அந்த இரண்டு விரல்களின் நுனியைப் பெரு விரல் நுனியால் தொடும் போது ப்ராண முத்திரை உருவாகிறது. மற்ற விரல்கள் நீட்டப்பட்டபடியே இருத்தல் வேண்டும். இந்த முத்திரை கண்பார்வைக் கோளாறையும்,மற்ற கண் சம்பந்தமான வியாதிகளையும் குறைக்க உதவுகிறது. உடலில் நோய் எதிர்ப்பு சக்திக்கும், களைப்பை நீக்கவும் கூட இந்த ப்ராண முத்திரை பயன்படுகிறது என்கிறார்கள்.





ஆக்கம் : அக்ஷயா சங்கானை

# நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்

உலகம் பிறந்ததிலிருந்து ஒரு கணம் கூட நின்றதில்லை. அப்படி ஒரு இயக்கம்! அப்படி ஒரு சுழற்சி! அப்படி ஒரு மாற்றம்! மாறுகின்ற உலகில் காண்பவைகளும் கண்ணோட்டமும் மாறிக் கொண்டே இருக்கின்றன!

ஆனால் அந்தந்தக் காலகட்டத்தில் வாழும் போது அழகு, அழகற்றவை என விமர்சிக்கிறோம். அது நியாயமாகவும் படுகிறது. உண்மையில் எது அழகு? தீப்பட்ட முகத்தையுடைய தாய் ஒருத்தி தனது குழந்தையைக் கொஞ்சி விளையாடும் போது, அந்த குழந்தைக்கு அந்த தாய்தான் உண்மையான அழகு. அந்த அழகு நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை! உலகிலேயே மிகச் சிறந்த அழகு தாய்மை!

வெறும் தோற்ற அழகை மட்டுமே எடை போடுகின்ற காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், நமது முன்னோர்கள், வரும் தலைமுறை எங்கே தவறிவிடுமோ என்று எக்காலத்திலும் பொருந்தும் வகையில் அழகு எது எனத் தமிழ் வரிகளில் அன்று அழுத்தம் திருத்தமாகக் கூறிச் சென்றிருக்கிறார்கள்.

கல்விக்கழகு பேசும் சொற்களில் குற்றமில்லாமை, செல்வம் படைத்தவர்களுக்கு அழகு சுற்றத்தினரைக் காப்பாற்றுவது, மன்னர்க்கு அழகு நீதிமுறைப்படி நாட்டை ஆள்வது, வணிகர்க்கு அழகு நாணயம் தவறாமை, வேளாண் மக்களுக்கு அழகு உழவை உயிராக மதிப்பது, மற்றும் வருமுன் அறிவது மந்திரிக்கு அழகு, போர் வீரனுக்கு அஞ்சாமை அழகு, வறுமையிலும் ஒழுக்கம் அழகு, அறிவுடையோருக்கு அடக்கம் அழகு, பிறந்த குழந்தைக்குத் தாயழகு, பள்ளிப் பருவத்தில் கற்பிக்கும் ஆசிரியை அழகு, இளமைப் பருவத்தில் உள்ளத்தில் நிறைந்தவர் அழகு, முதுமையில் பேரப் பிள்ளைகள் அழகு. இப்படி அழகின் அணிவகுப்புகள் நமக்கு ஏராளமாகவுள்ளன.

இது மட்டுமின்றி மிருகங்களின் அழகைக் கூட ரசிக்கக் கற்றுக் கொண்டுள்ள நாம், நம் இனத்தின் அழகு, மற்ற எல்லா உயிர்களிடமும் காட்டுகின்ற மனித நேயத்தில் தான் இருக்கிறது என்பதை மறந்து விட்டோம்.

காட்டில் வாழும் மிருகங்களும், தமது இனத்தவரே அழகு என்று கூடிக் குலவிச் சேர்ந்து வாழ்கின்றன. ஆனால் தமிழர்களாகிய எம்மால் ஒன்றாக இணைந்து வாழமுடியவில்லை இந்த நிலைதான் எமதுஉரிமை போராட்டத்தைக் கூட வலுவிழக்கச் செய்து எம்மை நாதியற்றவர்களாக்கி இருக்கின்றது.

இந்த நிலையிலிருந்து தமிழ் இனம் நிமிர்ந்தெழவேண்டும் அதற்கான வழிமுறைகளை நோக்கி பயனிக்க தினமகுடி வாசகர்கள் அனைவரும் ஓரணி திரள வேண்டும். ஜாதி, மதம், பிரதேசம், அரசியல் போன்ற பேதங்களை மறந்து நாம் தமிழர் என்ற எண்ணத்திற்குள் ஒன்றிணைய வேண்டும் அதன் மூலம் எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம் வாரீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம் நமக்கொரு பாடம்

- என்.கணேசன்

சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி" என்று திருவள்ளுவர் கூறுவார். பொதுவாக கோபம் எங்கே எல்லாம் சேர்கிறதோ அங்கேயெல்லாம் அழிவு தான். முக்கியமாய் அழிந்து போவது மன நிம்மதி. அதன் பின் கோபத்தால் உந்தப்பட்டு செய்யும் செயல்கள் எல்லாமே மேலும் அதிக அழிவை ஏற்படுத்தி நிலைமையை மோசமாக்கி விட்டே தணியும். இது பொது விதி. ஆனால் கோபம் கூட முறையாகப் பயன்படுத்தப்பட்டால் நல்ல மாற்றங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்த வல்லது. அது எப்படி என்பதை சில உதாரணங்களுடன் பார்ப்போம்.

1943ல் ஒரு நாள் அமெரிக்க கறுப்பர் இனத்தலைவரான மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்), டுப்ளின் நகரில் ஒரு பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு அட்லாண்டாவிற்கு பஸ்ஸில் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவருடன் அவருடைய ஆசிரியை ஒருத்தியும் பயணித்துக் கொண்டிருந்தார். வழியில் சில வெள்ளையர்கள் பஸ்ஸில் ஏறினார்கள். அவர்களுக்கு அமர இடம் இல்லாமல் போகவே பஸ் டிரைவர் மார்ட்டின் லூதர் கிங்கையும் அவரது ஆசிரியையும் எழுந்து அந்த வெள்ளையர்களுக்கு உட்கார இருக்கையை விட்டுத் தரச் சொன்னார். மார்ட்டின் லூதர் கிங்கிற்கு அது அநியாயமாகவும் அவமானம் தருவதாகவும் இருந்தது.
ஆனால் அந்தக் காலத்தில் அது அடிக்கடி நடக்கக் கூடிய நிகழ்ச்சி ஆனதால் அவருடைய ஆசிரியை உடனடியாக எழுந்து விட்டார். மார்ட்டின் லூதர் கிங் வேறு வழி இல்லாமல் தயக்கத்துடன் எழுந்தார்.

அவர் எழத் தாமதமானதால் பஸ் டிரைவர் அவரைக் கடும் வார்த்தைகளால் திட்டினார். அது அவரை மேலும் கோபமூட்டியது. 90 மைல் தூரத்தை அவர் பஸ்ஸில் நின்றபடியே பயணிக்க நேர்ந்தது.

அந்த நிகழ்ச்சியைப் பற்றி தன் சுயசரிதையில் பிறகு எழுதிய போது மார்ட்டின் லூதர் கிங் இப்படி குறிப்பிட்டார். "என் வாழ்வில் நான் மிக அதிக கோபம் கொண்ட நாள் அது. அந்த இரவை என்னால் என்றுமே மறக்க முடியாது". ஒடுக்கப்படும் கறுப்பு இன மக்களுக்காக அவர் குரல் கொடுக்க அந்த நிகழ்ச்சி ஒரு விதையாக அமைந்தது என்றால் அது தவறாகாது.

அந்தக் கோபத்தை அவர் தணித்துக் கொள்ள அவர் பலரும் நாடும் வழிகளை மேற்கொள்ளவில்லை. தானும் கண்டபடி திருப்பி அந்த டிரைவரைத் திட்டவோ, தாக்கவோ முனையவில்லை. ஒரு மத போதகராக வாழ்க்கையை ஆரம்பித்த அவருக்கு அந்த வழிகளில் மனம் செல்ல வில்லை. தனிப்பட்ட விதத்தில் அதை எடுத்துக் கொள்ளா மல் கறுப்பர்களுக்கு தொடர்ந்து நிகழும் அவமானமாகக் கண்ட அவர் கோபம் அந்த தவறான அநீதியான முறை யையே ஒழிக்க வழிகளைத் தேடியது.

1955ல் மாண்ட்கோமரி பஸ் புறக்கணிப்பு போராட்டத் தைத் தலைமை தாங்கி பெருமளவில் நடத்திய அவர் பல எதிர்ப்புகளைக் கண்டார். அரசாங்கம் சின்ன சின்ன வழக்கு களிலும் அவரை சிக்க வைத்து தடை செய்யப்பார்த்தது. அவருடைய சக கறுப்பர் இனத் தலைவர்களோ அவரது அறப்போராட்டம் பிடிக்காமல் அவரை எதிர்த்தனர்.

இரண்டு பக்கங்களிலும் எதிர்ப்பு அதிகமாக இருந்தது போதாது என்று வெள்ளைத் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல்கள் நிகழ்த்தினார்கள். 1956 ஆம் ஆண்டு அவர் வீட்டிலேயே வெடிகுண்டு வெடித்தது. அதிர்ஷ்டவசமாக அவரும் அவர் குடும்பத்தினரும் உயிர் தப்பினார்கள் என்றாலும் அவர் கோபம் அதிகரித்தது. கறுப்பர்களில் தீவி ரவாதத்தை ஆதரிக்கும் தலைவராக அவரும் மாறி விடும் படியான மனநிலைக்குத் தானும் வந்து விடுமோ என்று கூட சந்தேகப்பட்டதாக அவர் தன் சுய சரிதையில் சொன்னார்.

ஆனால் அந்தக் கோபத்தையும் தனிப்பட்ட விதத்திலும், தனிப்பட்ட மனிதர்கள் மீதும் எடுத்துக் கொள்ளாமல் அப்போதிருந்த சமூக முறையிலேயே குற்றம் கண்ட அவர் அந்த முறையை சமூகத்திலிருந்து அகற்ற போராட்டத்தில் இறங்கினார். அதில் கடைசியில் வெற்றியும் கண்டார். 1964 ஆம் ஆண்டு சத்தியாகிரக வழியில் அவர் அந்த சமூக அநீதிக்கு எதிராக போராடி வெற்றி கண்டதற்காக சமாதான நோபல் பரிசு பெற்றார். 1968 ல் அவர் படுகொலை செய்யப் பட்ட போதும் அவர் தான் எடுத்துக் கொண்ட போராட்டத்தில் வெற்றி பெற்றதை வரலாறு இன்றும் பாராட்டுகிறது.

அவருக்கு சத்தியாகிரக வழியில் வழிகாட்டியாக இருந்தவர் மகாத்மா காந்தி. இதை மார்ட்டின் லூதர் கிங் பல முறை குறிப்பிட்டு உள்ளார். மகாத்மா காந்தியும் தென் னாப்பிரிக்காவில் இருந்த போது ரயிலில் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கி அதில் பயணித்தபோது வெள்ளையரான ஒரு ரயில்வே அதிகாரியால் இறக்கி விடப்பட்டது நினைவிருக்கலாம். தன் அறப்போராட்டத்தை தென்னாபிரிக்கையில் தொடங்கியதற்கு அந்த நிகழ்ச்சி தான் விதையாக இருந்தது.


பஸ்ஸில் நின்று கொண்டே பயணிக்க வைத்த டிரைவரை வாயிற்கு வந்தபடி திட்டியோ, இறங்கிய பிறகு கல்லெடுத்து எறிந்தோ, பிறகு எதாவது ஒரு வெள்ளையருக்கு ஏதாவது தொந்தரவு கொடு த்தோ தன் கோபத்தை அவர் தீர்த்துக் கொண்டி ருந்தால் தனிமனித கோபத்தைத் தீர்த்துக் கொண்ட ஒரு சராசரி மனிதனின் செய்கையாய் போயிருந்திருக்கும். அமெரிக்க கறுப்பர்களுக்கு சம உரிமை கிடைத்த சரித்திரம் உருவாகி இருக்காது.

கோபம் நம்முள் பெரியதொரு சக்தியை உருவாக்க வல்லது. உறுதியாகச் செயல்பட வைக்கும் சக்தி வாய்ந்தது. கோபம் இருக்கும் நேரத்தில் செயல்படாமல் இருப்பது தான் மிகவும் கஷ்டம்.

அப்படிப்பட்ட நேரத்தை முறையாகப் பயன் படுத்தினால் அந்தக் கோபமும் நல்ல சிறப்பான மாற்றங்களை ஏற்படுத்த உதவும். இது பெரும் தலைவர்களுக்குத் தான் முடியும் என்பதல்ல, சாதாரண மனிதர்களுக்கும் முடிந்தது தான்.

பல சமயங்களில் கோபம் இது போல் பெரிய உந்து சக்தியாக அமையக்கூடும். பெரிய மாற்றங்களுக்கான பிள்ளையார் சுழியை அது போடக் கூடும்.

அதனால் அர்த்தமில்லாத கோபங்களை அவ் வப்போதே விட்டுத் தள்ளுங்கள். அர்த்தமுள்ள தாய் கோபம் வரும் போது அதனை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு தீர்வையோ, நல்ல மாற்றத்தையோ உருவாக்க முடிந்தால் கோபமும் நல்லதே அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதாரமான ச்சரியங்கள்

தற்செயலாக நடப்பது போல் இருக்கும் சில சம்பவங்களைப் பின் யோசித்துப் பார்த்தால் அது தற்செயல் தானா என்கிற சந்தேகம் நமக்கு வந்து விடும். அறிவியல் அல்லது பகுத்தறிவு விதிகளுக்குப் பொருந்தாதவையாக அவை தோன்றினாலும் கூட நம் அறிவுக்-கெட்டாத ஏதோ ஒரு விதி அந்த நிகழ்வுகளை சீரான முறையில் இயக்கி இருப்பது போல தோன்றும். அப்படிப்பட்ட சில ஆதாரபூர்வமான நிகழ்வுகளை இங்கு பார்ப்போமா?

முதலில் இரண்டு அமெரிக்க ஜனாதிபதிகள் விஷயத்தில் இருந்த ஒற்றுமைகள் சிலவற்றைப் பார்ப்போம்-


ஆப்ரகாம்லிங்கன் 1860 ஆம் ஆண்டும், ஜோன் கென்னடி 1960 ஆம் ஆண்டும் அமெரிக்க ஜானாதிபதியானார்கள் சரியாக நூறு வருட இடைவெளி. இருவரும் வெள்ளிக்கிழமை தினத்தில் தத்தம் மனைவிகளின் அருகில் இருக்கும் போது சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இருவரும் தலையின் பின்பகுதியில் குண்டு துளைத்து மரணம் சம்பவித்தது.இருவரும் இறந்த பின் ஜோன்சன் என்ற பெயருள்ள வர்கள் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்கள். (ஆண்ட்ரூ ஜோன்சன், லிண்டன் ஜோன்சன்)

லிங்கனின் செயலாளரின் முன் பெயர் ஜோன். ஜோன் கென்னடியின் செயலாளரின் பின் பெயர் லிங்கன்.

இன்னொரு சம்பவம் Life பத்திரிக்கையில் வெளியான உண்மை சம்பவம். இதனை வோரன் வீவர் என்ற கணித அறிஞர் தனது புத்தகம் ஒன்றிலும் குறிப்பிடுகிறார். அமெரிக்காவில் நெப்ராஸ்கா என்ற மாநிலதத்தில் உள்ள Beat-rice என்ற சிறிய நகரில் உள்ள ஒரு தேவாலயத்தில் 1950 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி 15 பாடகர்கள் சேர்ந்து கூட்டாக சரியாக காலை 07.20 மணிக்குப் பாடுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது . ஆனால் அத்தனை பேரும் வேறு வேறு காரணங்களினால் தேவாலயத்திற்கு வர தாமதமாகி விட்டது. ஒருத்தி ஒரு ரேடியோ நிகழ்ச்சியில் ஆழ்ந்து போய் கிளம்பத் தாமதமானது. இன்னொருத்தி கணிதப் பாடம் எழுதி முடித்துக் கிளம்பத் தாமதமானது. ஒருவருக்குக் காரை ஸ்டார்ட் செய்வதில் பிரச் சினை...இப்படி ஒவ்வொரு-வருக்கு ஒவ்வொரு காரணம். இவர்கள் சரியான நேரத்திற்குள் வந்து சேராததே இவர்களைக் காப்பாற்றியது என்பது தான் அதிசயச் செய்தி. காலை சரியாக 07.25 க்கு வெடிகுண்டு வெடித்ததில் தேவாலயம் தரை மட்டமாகியது.

ஹென்றி சீக்லேண்ட் (Henry Ziegland) என்பவன் 1883 ஆம் ஆண்டு தன் காதலியுடனான உறவை முறித்துக் கொண்டான். அந்தக் காதலி மன உளைச்சலில் தற்கொலை செய்து கொள்ள அவளுடைய சகோதரர் கடும் கோபமடைந்து சீக்லேண்டைத் தேடிக் கண்டுபிடித்து சுட்டு தானும் தற்கொலை செய்து கொண்டான். ஆனால் அதிர்ஷ்டவசமாக சீக்லேண்ட் சாகவில்லை. அந்தத் துப்பாக்கிக் குண்டு முகத்தை உராய்சிக் கொண்டு சென்று அங்கிருந்த மரத்தில் சென்று பதிந்தது. சில வருடங்கள் கழித்து அந்தப் பெரிய மரத்தை வெட்டி விட சீக்லேண்ட் நினைத்தான். ஆனால் அதை அவ்வளவு சுலபமாக வெட்டி விட முடியவில்லை. எனவே டைனமைட் குச்சிகளை வைத்து மரத்தைப் பிளக்க நினைத்தான். அப்படிச் செய்கையில் அந்த மரம் சுக்கு நூறாகி வெடிக்கையில் அந்தக் குண்டு சீக்லேண்டின் தலையில் பாய்ந்து அந்த இடத்திலேயே சீக்லேண்ட் மரணம் அடைந்தான். பல வருடங்கள் கழித்தும் அந்தக் குண்டு பழி தீர்த்துக் கொண்டது போல அல்லவா இருக்கிறது. இந்த சம்பவம் குறித்த தகவல் ரிப்ளியின்



நம்பினால் நம்புங்கள் என்ற புத்தகத்தில் வி-வரிக்கப்பட்டுள்ளது.

Ohio வில் பிறந்த இரட்டையர் வாழ்க்கையின் ஆச்சரியமான குறிப்புகள் 1980 ஜனவரி மாத ரீடர்ஸ் டைஜஸ்டில் வெளி வந்துள்ளன. இருவரும் பிறந்தவுடனேயே பிரிக்கப்பட்டு இருவேறு தொலைதூரக் குடும்பங்களுக்குத் தத்துக்கொடுக்கப்பட்டனர். இருகுடும்பங்களும் ஒன்றிற்கு ஒன்று தெரியாமலேயே குழந்தைகளுக்கு ஜேம்ஸ் என்று பெயரிட்டனர். இருவரும் சட்ட அமலாக்கப் பிரிவில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இருவருக்குமே பல திறமைகள் ஒன்றாகவே இருந்தன. இருவரும் லிண்டா என்ற பெயருடைய பெண்களையே முதல் திருமணம் செய்து கொண்டனர். இருவருமே தங்கள் மகன்களுக்கு ஜேம்ஸ் ஆலன் என்ற பெயரையே இட்டனர். இங்கே சின்ன வித்தியாசம் சொல்ல வேண்டும் என்றால் ஒருவர் James Alan என்றும் இன்னொருவர் James Allan என்று ஒரு ட எழுத்து சேர்த்தும் பெயர் வைத்தனர். இருவரும் முதல் மனைவியை விவாகரத்து செய்து இரண்டாம் திருமணம் செய்து கொண்டது பெட்டி (Betty) என்ற பெயருடைய பெண்களை. இருவரும் தங்கள் நாயிற்கு Toy என்ற பெயரையே வைத்திருந்தனர். நாற்பதாண்டு காலம் கழிந்து இணைந்த அந்த இரட்டையர் தங்களை அறியாமல் தங்கள் வாழ்க்கைக-ளில் இருந்த ஒற்றுமையை எண்ணி அதிசயித்தனர்.

மேஜர் சம்மர் போர்டு என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த ராணுவ அதிகாரிக்கும் மின்னலுக்கும் இருந்த தொடர்பு ஆச்சரியமானது. அவர் முதல் உலகப்போர் சமயத்தில் குதிரையில் இருந்து போர் புரிந்து கொண்டிருந்த போது மின்னல் தாக்கி இடுப்பிற்கு கீழ் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். பின் அவர் ஓரளவு குணமாகி கனடா நாட்டில் குடி பெயர்ந்தார். அங்கு ஆறாண்டு காலம் கழித்து மீன் பிடித்துக் கொண்டு இருந்த போது மறுபடியும் மின்னலால் தாக்கப்பட்டார். வலது பக்கம் பக்கவாதம் அவரைப் பாதித்தது. மறுபடி குணம-டைந்த அவர் உள்ளூர் பூங்காவில் உல-ாவிக் கொண்டிருந்த போது மின்னலால் தாக்கப்பட்டு உடம்பு முழுவதும் செயல் இழந்தார். அது நடந்து இரண்டாண்டுகளில் மரணம் அடைந்தார். இறந்த பின்னும் அவரை மின்னல் விடுவதாக இல்லை. நான்காண்டுகள் கழிந்து அவருடைய கல்லறை மின்னலால் தாக்கப்பட்டு சிதிலமாகியது.




இந்த நிகழ்ச்சிகள் நம்மை ஆச்சரியப்பட வைக்கின்றன அல்லவா? இவற்றை எல்லாம் தற்செயல் என்று கண்டிப்பாக நாம் நினைத்து விட முடியாது. இந்த சம்பவங்களைப் படிக்கையில் அவற்றில் முன்பே தீர்மானிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஒரு அம்சம் இருக்கிறது என்றல்லவா தோன்றுகிறது. ஏன், எதற்கு என்பது விளங்காவிட்டாலும் கூட அந்த ஏதோ ஒரு 'விதி'யை நம்மால் மறுக்க முடிவதில்லை அல்லவா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி வந்தது ஒலிம்பிக்



ஒலிம்பிக் தீபத்துடன் முதல் முதலில் ஓடியவர்

வானத்தில் ஆயிரம் நட்சத்திரங்கள் இருக்கலாம், ஆனால், அவற்றுக்கு மத்தியில் சூரியன் வந்தால் அவை கண்ணுக்குத் தெரிவதில்லை. அதுபோலவே விளையாட்டு உலகிலே ஒலிம்பிக் போட்டிகளுக்கு இணையான போட்டி என்று வேறெதுவுமில்லை,

இற்றைக்கு 27 நூற்றாண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டதுதான் இந்த ஒலிம்பிக் போட்டிகள்.

யேசு கிறிஸ்து பிறப்பதற்கு 776 ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க நாட்டின் ஒலிம்பியா என்ற இடத்தில் ஒரு நாள் போட்டியாக ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின.

கிரேக்கர்களின் கடவுளாகக் கருதப்படும் ஜீயஸ் மற்றும் ஹேரா ஆகியோரை வழிபட்டு அவர்களுக்கு அர்ப்பணிக்கப்படும் ஒரு விழாவாக ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்டது.

அந்க் காலத்தில் போர்க்கலையாகவும், தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் கேளிக்கையாகவும் இருந்த சிலவற்றைத் தொகுத்து விளையாட்டுப் போட்டிகளாய் மாற்றி முதல் ஒலிம்பிக் போட்டி நடத்தப்பட்டதாக பழைய வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க கிரேக்க உலகத்தின் ஒவ்வொரு நகரில் இருந்தும் ஏராளமான வீரர்கள் ஒலிம்பியா நகரத்தில் குழுமியிருந்தனர். போட்டிகளில் வென்ற வீரர்களுக்கு அந்தக் காலத்தில் வெற்றியின் சின்னமாக அணிவிக்கப்படும் ஆலிவ் இலைகளினால் ஆன கிரீடம் அணிவிக்கப்பட்டு அந்த கிரீடத்துடன் பெருமையாக தங்கள் நகர்களுக்கு திரும்பியுள்ளனர்.

ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்கள் மட்டுமே பங்கேற்றனர். திருமணமான பெண்கள், போட்டியில் பங்கேற்கவோ, பார்க்கவோ அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பணிப்பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். அங்கிருந்த டிமட்டர் ஆலயத்தின் தலைமை பெண் பூசாரி 2ஆவது உயர்ந்த இருக்கையில் அமர்த்தப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் பெண்கள் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை என்றாலும், ஒலிம்பிக் போட்டிகளுக்கு இணையாக பெண்கள் மட்டுமே பங்கேற்று அவர்களுடைய திறனை வெளிப்படுத்த ஹேரேயா போட்டிகள் என்று தனியாக நடத்தப்பட்டன. கிரேக்க கடவுளான ஜீயசின் மனைவி ஹேரா பெயரால் இந்த போட்டிகள் நடத்தப்பட்டன.

அன்றைய ஒலிம்பிக்கில் மல்யுத்தம், ஓட்டப்பந்தயம், ஈட்டி எறிதல், எடை மிகுந்த கல்லை எறிதல் ஆகியவற்றுடன் இன்று வரை பிரபலமாக இருக்கும் மரத்தன் போட்டி என்றழைக்கப்படும் நீண்ட தூர ஓட்டப்பந்தயம் நடந்துள்ளன.

முதலில் ஒரு நாள் மாத்திரமே நடத்தப்பட்ட போட்டியாக இருந்த ஒலிம்பிக்ஸ், பிறகு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை பல நாட்கள் கொண்ட போட்டியாக நடத்தப்பட்டுள்ளது. காலத்தின் போக்கின் ஓர் அடையாளமாக 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை இப்போட்டிகள் நடத்தப்பட்டதாக கிரேக்க வரலாறு கூறுகிறது.

இப்போட்டிகள் நடைபெறும்பொழுது எந்த வன்முறையும், போரும் நடைபெறக் கூடாது என்பதில் அதீத கட்டுப்பாடும், கவனமும் செலுத்தப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டி துவங்குவதற்கு முன்னர், ஒலிம்பியா நகரில் இருந்து 3 ஸ்போன்டோ ஃபோராய் என்று அழைக்கப்படும் ஈலிஸ் நகர குடிமக்கள் ஆலிவ் இலைக-ளுடனான கிரீடம் அணிந்து ஒரு மாத காலத்திற்கு கிரேக்கம் முழுவதும் சுற்றி வருவர். அவர்கள் புறப்பட்டதற்கு பிறகு புனிதமான அமைதியும், சமாதானமும் கடைபிடிக்கப்பட வேண்டும் என்பது வழமையாக இருந்துள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளைக் காண வரும் ரசிகர்கள் எவரும் எந்த வித பாதிப்புகளுக்கும் உள்ளாகக் கூடாது என்றும், எந்தவொரு வன்செயலும் கிரேக்க கடவுளான ஜீயசுக்கு எதிரானதாகவே கருதப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஒலிம்பிக்கின் எல்லா போட்டிகளும் ஒலிம்பியா நகரில் உள்ள மாபெரும் விளையாட்டரங்கில் நடத்தப்பட்டன. 40,000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய மாபெரும் விளையாட்டரங்காகத் திகழ்ந்த அந்த அரங்கு கிறிஸ்து பிறப்பதற்கு முன் 4ஆவது நூற்றாண்டு வரை இருந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன.

அன்றைய ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டவர்களை ஆத்லோஸ் என்று அழைத்தனர். அதுதான் ஆங்கிலத்தில் இப்பொழுது அத்லெட்ஸ் என்று அழைக்கின்றனர். மேலோர் கீழோர் என்று ஒதுக்காமல், எல்லோரும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளனர். உதாரணத்திற்கு மெகாரவைச் சேர்ந்த ராணுவ தளபதியும், பாலிமினிஸ்டர் என்கின்ற ஆடு மேய்ப்பவரும், ரோட்ஸ் எனும் அரச குடும்பத்தைச் சேர்ந்த டயாகுராஸ் என்பவரும், பாசிடோனிய அரசர் அமின்டாஸ் என்பவரின் மகனும், அவருக்கு பிறகு பேரரசராக திகழ்ந்த அலெக்சாண்டரும், டெமாக்ரைட்டர்ஸ் என்ற தத்துவ ஆசிரியரும் போட்டிகளில் கலந்து கொணண்டதாக ஒலிம்பிக் சரித்திரம் பகர்கிறது.

மி.சி. 776இல் துவங்கிய ஒலிம்பிக் போட்டிகள் ஏசு பிறந்ததற்கு பிறகு (ஏ.டி.) 393ஆவது ஆண்டு வரை நடைபெற்று வந்துள்ளது. 1169 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்று வந்த ஒலிம்பிக் போட்டிகளை கிரேக்க அரசராக 399ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற தியோடோசியஸ், விளையாட்டை மதநம்பிக்கை அற்றவர்களின் கலாச்சாரம் என்று கூறி ஒலிம்பிக் போட்டிகளை தடை செய்தார்.

ஒலிம்பிக் போட்டிகள் நடந்த ஒலிம்பியா நகரமும், போட்டிகள் நடத்தப்பட்ட அற்புத அரங்கும் கொஞ்சம் கொஞ்சமாக சீரழிந்து யாரும் கண்டுகொள்ளாத இடங்களாயின. 1766ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த தொல்லியலாளர் எர்னஸ்ட் கர்டியஸ் என்பவர் ஒலிம்பியா நகரை புதுப்பித்து அதன் பாரம்பரிய தொன்மையை காப்பாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக இன்று அந்த நகரமும், பண்டைய ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட்ட அந்த அரங்கமும் வரலாற்றின் சிதைந்த சிதிலங்களாக சுற்றுலாப் பயணிகள் செல்லும் இடமாக காட்சியளிக்கின்றது.

அன்று ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட்ட மைதானம் இன்று சர்வதேச ஒலிம்பிக் இயக்கத்தின் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்யும் ஒலிம்பிக் கழக கட்டிடம் இயங்கும் இடமாகியுள்ளது.

நீண்டகாலமாக நடைபெறாதிருந்த ஒலிம்பிக் போட்டிகள், பிரான்ஸைச் சேர்ந்த குபெர்த்தியின் முயற்சியினால் மீண்டும் நவீன ஒலிம்பிக்காக 1896 ஏப்ரல் 06ஆம் திகதி திங்கட்கிழமை கிறீஸின் எதென்ஸ் நகரில் தொடங்கியது.

இன்றுவரை அந்த ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.



# நெருக்கடியில் உசைன்போல்ட்

லண்டன் ஒலிம்பிக்கைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு நாட்டிலுமிருந்து பங்கேற்றிருக்கும் வீர-வீராங்கனைகளின் பெறு பேறுகளை அந்தந்த நாடுகள் மிகவும் உன்னிப்புடன் - எதிர்பார்ப்புடன் கவனித்துக்கொண்டிருக்கும்.

ஆனால், முழு உலகத்தையும் எதிர்பார்ப்புக்குள்ளாக்கி உள்ளவர், ஜமைக்காவின் உசைன் போல்ட் என்றால் அது மிகையாகாது.

அவர் பங்கேற்கவிருக்கும் 100, 200 மீற்றர் ஓட்டங்கள் மிகவும் எதிர்பார்ப்புக்குள்ளாகி யுள்ளன.

இவர் கடந்த ஒலிம்பிக் போட்டிகளின்போது உலக சாதனை படைத்திருந்தமை இந்த முறை அவரை பெரிதும் எதிர்பார்க்க வைத்துள்ளது. அத்துடன் விளையாட்டுப் போட்டிகளுள் மிகவும் விறுவிறுப்பான போட்டிகளாக 100, 200 மீற்றர் ஓட்டப் போட்டிகள் உள்ளமையும் இதற்கு ஒரு காரணமாக அமையும்.

இந்தப் போட்டிகளின் மீது எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளமையால் போல்ட் மிகவும் நெருக்கடிக்குள்ளாகி யுள்ளார்.

அவர் எப்படி ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிடம்

## ஜூலை 14 முதல் ஓகஸ்ட் 14 வரை



### மேடம்

இந்த மாதத்தில் தொழில் வியாபாரத்தில் தொடர்ந்து நெருக்கடிகள் காணப்பட்டாலும் கிடைக்க வேண்டிய இலாபம் குறையாமல் கிடைக்கும். உததியோகம் பார்ப்பவர்களுக்கு வேலை சுமை அதிகமாக இருக்கும். கூடுதல் வேலைப் பளுவால் உடல் நலம் அதிகமாக இருக்கும். பிள்ளைகள் வகையில் சில செலவுகள் ஏற்படும்.



### இடபம்

வருமான வழியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள பல நல்ல வாய்ப்புகள் உருவாகும். பொன், பொருள் சேரும். சிலருக்கு வாகன வசதி ஏற்படும். வீடு,நிலம் போன்றவற்றை வாங்கும் முயற்சிக்கு நல்ல வெற்றி கிட்டும்



### மிதுனம்

இம்மாதத்தில் தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான போக்கு காணப்பட்டாலும் எதிர்பார்க்கும் லாபம் கிட்டாது. உத்தியோகம் பார்ப்பவர்கள் கடினமாக உழைத்தாலும் மேலதிகாரியிடம் நல்ல பெயர் வாங்க முடியாது. ஆனால் அதைவிட அதிகமாகச் செலவு ஏற்படும்.



### கடகம்

இம்மாதத்தில் தொழில், வியாபாரத்தில் மந்தமான போக்கு காணப்படும். கணக்கு வழக்குகள் குளறுபடியாக இருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். . குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே நெருக்கமான உறவு காணப்படும். பிள்ளைகளின் படிப்பு திருப்திகரமாக இருக்கும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்



### சிம்மம்

இம்மாதத்தில் உங்களுக்குப் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போகும். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் தலை தூக்கும். இம்மாதத்தைப் பொறுத்தவரை மாத பிற்பகுதியில் வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும்.



### கன்னி

இம்மாதத்தில் தொழில் வியாபாரத்தில் நிலவி வந்த மந்தமான போக்கு நீங்கும். கூட்டு வியாபாரத்தில் ஏற்பட்டிருந்த கருத்து வேற்றுமை அகலும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு குறையும். . குடும்பத்தில் ஏற்பட்டு வந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். சில குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள மனைவியின் ஆலோசனைப்படி நடந்து கொள்வது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதிடம்
ஜூலை 14 முதல் ஓகஸ்ட் 14 வரை



### துலாம்

இம்மாதத்தில் உங்களுடைய பொருளாதார நிலை பிரமாதமாக இருக்கும் என்று சொல்ல முடியாவிட்டாலும் மோசமாக இருக்காது ஆனால் எல்லாவற்றையும் சமாளிக்கும் அளவுக்கு எங்கிருந்தாவது பணம் கைக்கு வந்து சேர்ந்து விடும். அதிக அலைச்சல், கடின உழைப்பு, தூக்கமின்மை போன்றவை காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும்.



### விருச்சிகம்

இம்மாதத்தில் தொடர்ந்து உங்களுக்குப் பலவகையான செலவுகளும் விரயங்களும் ஏற்பட்டாலும் எல்லாவற்றையுமே சமாளிக்கும் அளவுக்கு எப்படியாவது வருமானம் வந்து விடும். எதிர்பாராத வகையில் ஆதாய வரவுகள் ஏற்படும். விரும்பும் பொருட்களையும் வாங்க முடியும். தங்களது எண்ணங்கள் செயல்கள் அனைத்தும் சாதிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் இருக்கும்



### தனுசு

இம்மாதம் தொழில், வியாபாரத்தில் நிலவி வந்த மந்தமான போக்கு நீங்கும். கூட்டு வியாபாரத்தில் நிலவி வந்த கருத்து வேறுபாடு நீங்கும். உத்தியோகம் பார்ப்பவர்களின் கடின உழைப்பையும் நேர்மையையும் மேலதிகாரிகள் பெரிதும் பாராட்டுவார்கள். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே நெருக்கமான உறவு காணப்படும். பிள்ளைகளால் மேன்மை உண்டாகும்.



### மகரம்

இம்மாதத்தில் உங்களால் நேரா நேரத்திற்கு சாப்பிட முடியாமல் போகும். பல சமயங்களில் ஆறிப்போன உணவைச் சாப்பிட நேரிடும். நேரம் தவறிச் சாப்பிடுவதால் செரி-மானக் கோளாறு, வயிற்று வலி போன்றவற்றால் பாதிப்பு ஏற்படலாம். தாயாருக்கு அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்படும். . உறவினர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படும்



### கும்பம்

இம்மாதத்தில் அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டுதல், வாக்குவாதங்களின் போது தரக்குறைவாகப் பேசுதல் போன்றவை காரணமாகச் சிலரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. அடிக்கடி நோய் நொடிகள் என்று ஏற்பட்டு உங்களை முடக்கிப் போட்டு விடும். அடிக்கடி மருத்துவச் செலவு ஏற்படும். உமது இடைவிடாத முயற்சியால் எல்லாம் இனிதாக முடியும்



### மீனம்

இம்மாதத்தில் தொழில், வியாபாரத்தில் மந்தமான போக்கு காணப்படும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். தொழிலாளர்கள் சம்பள உயர்வுக்காகத் தொடர்ந்து போராட வேண்டியிருக்கும். குறிப்பாக வெளி இடங்களுக்கோ வெளியூர் பயணங்களிலோ முன்பின் தெரியாத வரை நம்பி எந்தவிதமான செயலிலும் ஈடுபட வேண்டாம்

# திருத்தல மகிமை

## சிவ பூமி

இந்து சமுத்திரத்தின் முத்தாம் இலங்கைத்தீவினிலே வாழுகின்ற மக்களின் அடிப்படையில் ஏராளமான புனித திருத்தலங்கள் உள்ளன. இம்மாத இதழுக்கான தினமகுடியின் புனித தளங்கள் பகுதியை அலங்கரிக்கும் திருத்தலம் கொழும்பு மாநகரிலே முற்று முழுதாக கருங்கல்லால் திராவிட கட்டிடக்கலையின் மகோன்னதத்தை பறைசாற்றும் வண்ணம் கட்டப்பட்ட அருள்மிகு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயமாகும்.

கொச்சிக்கடை என்றாலே ஞாபகத்திற்கு வருவது சகல மதத்தினராலும் பொதுப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட புகழ் மிக்க கோடி அற்புதரான அந்தோனியாரின் தேவாலயமும் கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் திருத்தலம். என்றால் மிகையாகாது.

பொதுவாகவே இலங்கையில் உள்ள ஏராளமான சிவாலயங்கள் அனைத்தும் வரலாற்று தொன்மை வாய்ந்தவையாக புராண காலத்து தொடர்பு சாட்சி பகிர்கிறது. பெரும்பாலான சிவாலயங்கள் கடற்கரை துறைமுகத்தின் அருகாமையில் தான் அமையபெற்றிருக்கிறது. யாழ்ப்பாணம், திருகோணமலை, சிலாபம், மாந்தை சில உதாரணங்களாகும்.

புராண வரலாற்று இதிகாசக் குறிப்புக்களின் படி சைவமதக் கோட்பாடு பண்பாட்டுவிழுமியங்கள் சரித்திர சம்பிரதாய வழிபாட்டு அம்சங்களுடன். பக்தி மார்க்கம் மதக்கோட்பாடு மத அனுஷ்ட்டானங்களில் சிறந்ததொரு நாடாக மிளிர்கிறது. இவை மட்டுமன்றி திதிய நைமித்தியக் கிரிகைகள் விரதங்கள் உற்சவங்கள் வைபவங்கள் வழிபாட்டு முறைமைகள் ஊடாக பக்தி மார்க்கம் செழித்து வளர்கின்றது. இதனால் தான் திருமூலனார் இலங்கையை சிவபூமி என குறிப்பிட்டுள்ளதை நாம் சைவ இலக்கியங்களில் காண முடிகின்றது. இன்னும் சிறப்பம்சமாக பாடல் பெற்ற திருத்தலங்களில் திருக்கேதீஸ்வரம் மற்றும் திருக்கோணேஸ்வரம் இரு சிவாலயங்களும் இரு கண்களாக திகழ்கின்றன. இங்கே சைவஆகம விதிகளுக்கு அமைய தன்னை முழுமையாக சிவபணிக்கே அர்ப்பணித்தே இலங்கையை ஆண்ட மன்னன் சிவபக்தன் இ ரா வ ண னை க் குறிப்பிடவேண்டும்.




வட கொழும்பிலே மக்களின் வழி பாட்டிற்கும் ஆன்மீகச் செயற்பாட்டிற்கும் தனித்துவமான சிவாலயம் வேண்டும். என ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் உள்ளத்தில் உருவான எண்ணக்கருவை அவ்எண்ணத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் அன்னார் ஓர் அரிய கனவை காணும் பேறினைப் பெற்றார். அவருக்கு கனவில் மாதுளம் கனி தோண்றியது அக்கனியை உடைத்து பார்த்த போது அதனுள் சிவலிங்கத்தை காணும் பேற்றினைப் பெற்றார். உள்ளத்தில் உள்ள உணர்வும் உறக்கத்தில் கண்ட கனவும் இணைந்து கொள்ள இக்கோயில் நிர்மாணத்திற்காண காணியை கப்டன் ஜோன் எவாவுல் ஸ்ரோன் என்வரிடம் இருந்து. தன் சொந்தப் பணத்திலேயே கொள்வனவு செய்தார்

ஆரம்ப காலத்தில் இப்பகுதியானது. மீனவர்களின் கிராமம் ஆதலால் தென்னை மரங்கள் நிறைந்த தோப்பாக காணப்பட்டதுடன் அருகில் ஏராளமான கட்டிடங்களும் நிறைந்திருந்தன மேலும் இக்கோயிலின் பராமரிப்புக்கென நாத்தாண்டியா ஸ்ரீ கம்பளை எஸ்டேட்டில் 500 ஏக்கர் நிலத்தினை வாங்கி இக்கோவில் பராமரிப்பிற்கு அதன் வருமானத்தை வழங்கும் வண்ணம் ஒழுங்கு செய்தார். பிரித்தானியர் காலணித்துவ ஆட்சியில் பொன்னம்பல முதலியார் அவர்கள் 1856 கோவில் வேலைகளை ஆரம்பித்தார் 1857 குடமுழுக்கு விழா நடைபெற்றது. மீண்டும் புணரமைப்பு 1873 வைகாசி மாதம் குடமுழுக்கு செய்யப்பட்டது. 1887 பொன்னம்பல முதலியாரின் மறைவுக்கு பின் அவரது மூத்த புதல்வாரன காலஞ் சென்ற முதலியார் குமாரசாமியிடம் கையளிக்கப்பட்டது.ஆயினும் 1905 ஆண்டு அவரின் மறைவையடுத்து அவரது சகோதரர் பொன்னம்பலம்

இராமநாதன் பெறுப்பேற்றுக் கொண்டார்.தன் தந்தையும் சகோதரனும் விட்டுச் சென்ற பணியை சிரமேற் கொண்டு பல செயல் முறைத்திட்டங்களுடன் உயர்ந்த நோக்கு கட்டுப்பாடு கடமையுணர்வு அயராத முயற்சி ஆழ்ந்த அர்ப்பணிப்பு தளராத தன்னம்பிக்கை கொண்டு ஆலயத்தின் அறங்காவலராக செயலாற்றினார்.

ஆரம்பத்தில் இத்திருத்தலமானது வெறுமனே செங்கற்களாளும் சூழைச் சுண்ணாம்புக் கலவையினாலும் மட்டுமே கட்டப்பட்டிருந்தது. காலக்கிரமத்தில் பொன்னம்பல இராமநாதன் அவர்களின் பெரும் முயற்சியினால் இப்போது முற்று முழுதாக கருங்கற்களில் நிலை பெற்றிருக்கிறது. தென்னிந்திய கலைஞர்களின் கைவண்ணத்தில் 1907-1912 பூர்த்தியானதையடுத்து.





நவம்பர் மாதம் 21 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1967-12-6 ஆம் திகதி கிழக்கு வாயில் முகப்பு ராஜகோபுரமும்1974-2-6 ஆம் திகதி ஸ்ரீ சிவகம சௌந்தரி அம்பாள் விக்கிரகமும் 1986 ஆண்டு நவக்கிரக ஆலயம் சண்டேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றுடன் ஸ்ரீசந்தான கோபாலர் திருவுருவமும் பிததிட்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. கோவிலின் வெளி வீதியில் தென்புறத்தே ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கும் தனித்தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டு விக்கிர கங்கள் பிரதிக்ஷ்டை செய்யப்பட்டன.

2002 ஆண்டு கும்பாபிஷேகத்தின் போது கோபுர உட்பகுதியில் சூரிய சந்திர பகவான்கள் பிராதிக்ஷ்டை செய்யப்பட்டன கோயிலின் வெளி வீதி ஈசான மூலையில் ஸ்ரீ சொர்ணபுக்ஷ்கரணி தீர்த்த தடாகம் அமைக்கப்பட்டது. அதே போல் கோயிலின் கிழக்கு மற்றும் மேற்கு புறத்தே நுழைவாயில் கோபுரங்கள் அமைக்கப்பட்டன இக்கோபுரத்தின் சிறப்பம்சமாக ரிக்ஷபருடரான சிவனையும் அம்பாளையும் கோபுரத்தின் வெளிப்புறத்திலும் சித்தரிக்கப்பட்டு இருப்பது சிறப்பம்சமாகும். தினமும் ஆலய அபிசேகங்களுக்கு காலையும் மாலையும் பாலைச்சுரந்து தரும் கோமாதா பசுக்கள் வசிப்பதற்கான கோமாத இல்லமும். அர்ச்சகர்கள் குருக்கள் ஆலயப் பணியாளர்கள் வதிவிடமும் அமைந்திருப்பது சிறப்பேயர்கும்.



இவ்வாலயத்தின் கிழக்குப்புற நுழைவாயில் ஊடாக நாம் உள்ளே நுழையும் போது மாமரம், பலாமரம், வில்வமரம், மகிழ்மரம், கொன்றைமரம் இத்திமரம், முதலான தலவிருட்சங்கள் நிறைந்த சோலையும் அரசமரத்தின் நடுவே இணைந்த ஆலமரம் அமைதுள்ளமை இங்கு காணும் அதிசிறப்பம்சம் எனலாம். இருப்பினும் மகிழ்மரமே இக்கோவிலின் தலவிருட்சமாகும் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் திருத்தலத்தில் நாம் நுழைந்ததும் முதலில் தரிசிப்பது மூலமூர்த்தியையாகும் கோபுர வாயிலூடக உட்செல்லும் போது இடது புறத்தே சூரியனையும் வலது புறத்தே சந்திரனையும் தரிசிக்கும் பாக்கி யத்தினைப் பெறுகின்றோம் இவற்றைத் தாண்டி மேலும் முன்னோக்கி நகரும் போது மூலவரைத் தரிசிக்கும் அரிய பேற்றை நாம் பெறுகின்றோம். அங்கே இரண்டரை அடி உயரத்தில் உயரமான மண்டபத்தின் மத்தியில் நடு நாயகமாக வீற்றிருப்பவர் ஸ்ரீ சுவர்ண சபேக்ஷ்வரரான பொன்னம்பல வாணேக்ஷ்வர மூர்த்தியாகும்.

பாாக்கும் இடமெங்கும் பரவசமூட்டும் வண்ணத்தில் கலைசிற்ப நுணுக்க வேலை பாடுகள் நேர்த்தியான மண்டபங்களோடு அமைதியான சூழலில் ஆத்மதிருப்தி பெற அனைத்து பக்தர்களையும் அழைக்கிறது. தலைநகர் கொழும்பில் தலைசிறந்த சிவாலயமாக காட்சியளிக்கும் கொச்சிக் கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் திருத்தலம். இத்திருத்தலத்தைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள திருத்தலததில் வரலாற்று நூல் உள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நடிப்பும் ஒரு படிப்பு

யாதேஷ்

இன்றைய இளையோர் உலகம் கலை, இலக்கியங்களில் அதிகளவு ஆர்வம் காட்டுவதில்லை எனினும் தத்தமது தேவைகளுக்கு ஏற்ப இத்துறைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந் நிலையில் நடிப்பு என்பது என்ன? இது குறித்து அறிய விரும்புபவர்களுக்காக தினமகுடியில் ஒரு அலசல்....

நடிப்பை எளிதாக விளக்குவதானால் அது போலச் செய்தாலும் (நிகழ்த்துபவர்) நம்ப வைத்தலுமான (காண்பவர்) இருவேறு மனங்களின் அந்தக் கண நேசவில் உருவாகும் ஒரு படைப்பு நிகழ்வு என்று கூறலாம்.

இதனைத் தான் செயிற்றியனார் மொழியில் "உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல் மெய்ப்பாடென்ப மெய்புணர்ந்தோரே" எனச் சொல்லப்படுகிறது. உய்ப்போன் என்பது இன்னொருவராய்த் தன்னை இன்னொரு சூழலில் நிறுத்தி, மனதளவில் அதை உய்த்தனுபவித்து உணர்ச்சிக் குறிப்புகளால் அதைப் வெளிப்படுத்தி.. காண்போர்க்கு அவ்விதமே எய்துவதன் மூலம் சுவையுணர்வை வழங்குவது ஆகும்.

இந்த வகையில் மேலைதேய நடிப்பு முறைமைகளில் ஸ்தானிஸ்லாவ்ஸ்கியின் நடிப்புமுறைமை (Method Acting) பலராலும் பேசப்படும் ஒன்றாக இருக்கிறது. உளவியல் உடலியல் நிகழ்வு (Psycho, physical action)க்கு அடிப்படையான ஆழ்மனத்தைப் (Subconscious) பிரக்ஞைப்பூர்வமாகத் (Conscious) தொட்டு, உள்வய நடிப்பு நுணுக்கங்களின் (inner acting technique) மூலம் உருவான முறைமைகளை இது கொண்டிருக்கிறது.

இது குறித்து மேலும் விளக்குவதாயின்....

மாடாக ஒருவர் நடிப்பதாக வைத்துக் கொள்வோம். மாடு மாதிரி சப்தமிட்டுக் கொண்டும் தலையை ஆட்டிக் கொண்டும் கொம்புகளால் முட்டுவதாகப் பாவனை செய்து கொண்டும் ஒருவர் மாடு போலச் செய்ய முடியும். இது குறியீட்டு நிலையில் அறிவுப்பூர்வமாக மட்டுமே வெளிப்படுத்துகிறது. ஆனால் அதைமீறி தன் அகவய நுணுக்கங்களைத் தூண்டி மாட்டின் உடற்சிலிர்ப்பைத் தன்தோல் அசைவின் மூலம் அப்படியே காட்ட முற்படுகிற பொழுது, சாத்வீக பாவத்தைத் தொடுகிறபோது,கலை புதிய சாளரத்தைத் திறக்க வழிகாட்டுகிறது - ஒன்றுதலும் பரவசமும் நிகழ்கின்றன இத்தகைய உடலியல் நடிப்பை இந்த முறைமை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாடகத்தில் நடிகனின் இடம் அவனின்றி ஓரணுவும் அசையாது என்பதாயிருக்கிறது. ஆனால் திரைப்படத்தில் நடிகனின் இடம் அப்படியில்லை. அவனின்றியே அனைத்தும் அசையக் கூடிய சாத்தியங்களைக் கொண்டது. ஒளிப்பதிவுக் கருவியும் (Camera) படங்காட்டுங் கருவியும் (Project) இல்லாமல் ஓரணுவைம் அசையாது என்கிற விதியைக் கொண்டது திரைப்படம். அந்த வகையில் திரைப்படமென்பது நெறியாளருக்கேயான (Director) முதலாவதும் முடிவானதுமான ஓர் ஊடகம் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்க வாய்ப்பேதுமில்லை.

எனவே நடிப்பு என்பது பல்வேறு பரிமாணங்களை கொண்டுள்ளது இதனை முழுமையாக அறிந்து கொள்வதன் மூலமே சிறந்த நடிகனாக உயர முடியும். இதற்கு பயிற்சியும் முயற்சியும் தேவை என்பதே பிரதானமானது.

கலை நிகழ்வுகளுக்காக மட்டுமின்றி வாழ்வியலுக்கும் தேவையான நடிப்பை அறிவதில் நாம் ஏன் ஆர்வம் காட்டக்கூடாது?









# காமெடி நடிகர்களின் விசிறி நான்

சீரியஸான வேடங்களில் நடித்தாலும் காமெடி நடிகர்களுக்கு நான் ரசிகை என்றார் அசின். இது பற்றி அசின் கூறியதாவது: நடிப்பில் உள்ள ஆர்வத்தைவிட அதிகபட்ச ஆர்வம் புத்தகம் படிப்பதில்தான் இருக்கிறது. எந்த புத்தகம் கிடைத்தாலும் படித்து முடிக்காமல் கீழே வைக்க மாட்டேன். கதைகள், தத்துவம், பொழுதுபோக்கு என எல்லா வகை புத்தகங்களும் படிப்பேன்.

குறிப்பாக காமெடி கதை அம்சம் கொண்ட புத்தகம் என்றால் உயிர். படிக்கும் ஆர்வம் சிறுவயதிலிருந்து என் உடலில் ஊறி இருக்கிறது. எனக்கு நண்பர்கள் குறைவு. எனவே எனது பெரும்பாலான நேரத்தை புத்தகம் படிப்பதில்தான் செலவிடுவேன். இப்போதுகூட எங்காவது பயணம் புறப்பட்டால் என் துணையாக வருவது புத்தகம்தான்.

எந்த ஏர்போர்ட்களில் இறங்கினாலும் உடனே புத்தக கடைக்கு செல்வேன். சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் உள்ள புத்தக கடையில் என்னை அடிக்கடி பார்க்கலாம். அங்கு வேலை செய்யும் எல்லோரையும் எனக்கு தெரியும். நான் வருகிறேன் என்று தெரிந்தால் காமெடி கதைகள் அடங்கிய புத்தக தொகுப்பை தயாராக எடுத்து வைத்துவிடுவார்கள். படங்களில் சீரியஸான வேடங்களில் நடிக்கிறேன். நிஜத்தில் நான் காமெடி பட ரசிகை. படங்களில் வரும் காமெடி நடிகர்களுக்கு நான் எப்போதும் ரசிகை. இவ்வாறு அசின் கூறினார்.

தமிழகத்திலிருந்து –யுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருந் துளசி

இயற்கையாக உடலில் உள்ள சளி அதன் அளவிற்கு மீறி, பல்கிபெருகி வேதனையை உண்டாக்கும்.,பெருகிய சளியை வெளியேற்றி,மீண்டும் சளி உண்டாகாமல் தடுக்க நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

மஞ்சள், மிளகு,சிற்றரத்தை, பூண்டு, மல்லி,சிறிய வெங்காயம் ஆகியன நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் இயற்கை உணவுகள். இவற்றை அன்றாட உணவில் அதிகம் சேர்க்க வேண்டும்.


அடிக்கடி தோன்றும் சளித் தொல்லையை நீக்கி. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தி. பால். தயிர் போன்ற உணவுகளையும் நன்கு எடுக்குமளவுக்கு. நுரையீரலுக்கு வலுவை தரும் அற்புத மூலிகை கருந்துளசி.

"ஆசிமம் டெனியுபுளோரம் டைப்பிகா" என்ற தாவரவியல் பெயர் கொண்ட லேமியேசியே குடும்பத்தைச் சார்ந்த கருந்துளசி செடிகளின் இலைகள் கபத்தை நீக்கி,நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும்.

சளியை கட்டுப்படுத்த இரண்டு அல்லது மூன்று கருந்துளசி இலைகளை பசும்பாலில் போட்டு காய்ச்சி குடிக்க, பாலின் ஒவ்வாமையால் ஏற்பட்ட கபம் நீங்கும். இதை நீரில் போட்டு, கொதிக்கவைத்து ஆவிபிடிக்க, சைனஸ் தொல்லையால் ஏற்பட்ட சளி நீங்கும். அடிக்கடி சளி பிடிக்காமல் இருக்க ஐந்து அல்லது பத்து கருந்துளசி இலைகளை, ஒரு லிட்டர் நீரில் ஊறவைத்து அந்த நீரை அருந்தி, பின் இலைகளை மென்று சாப்பிட வேண்டும்.

தினமும் அதிகாலையில், இரண்டு முதல் நான்கு கருந்துளசி இலைகளை வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர ஒவ்வாமை மற்றும் கிருமித் தொற்றினால் ஏற்படும் சளித்தொல்லையிலிருந்து காத்துக் கொள்ளலாம். பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலின் அபிஷேகப் பொருளான துளசியை, கபப்பொருட்களின் ஒவ்வாமையால், தோன்றும் சளித் தொல்லையை நீக்க பயன்படுத்தலாம்.





# மகிழ்ச்சியாக இருப்பதற்கு விரும்புகிறீர்களா?

மகிழ்ச்சியை மனத்தின் ஒரு நிலை என்று சொல்வார்கள். எனவே மனம்தான் அதன் நிலைக்களம், உற்பத்தி மையம் என்று தெரிகிறது. ஆனால் உண்மையான மகிழ்ச்சி என்ற நிலையை யாரும் தேடுவதில்லை. மகிழ்சசிக்குக் காரணமான சில பொருள்களையும் மனிதர்களையும் அனுபவங்களையும் தான் தேடுகின் றனர். அதனால்தான் மிகழ்ச்சி அவர்க ளை விட்டு விலகிப் போகிறது.

மகிழ்ச்சி என்பதை எதிலிருந்தோ கிடைப்பது என நினைப்பதால் தான் அது கிடைப்பதில்லை. கிடைத்தாலும் நிலைப்பதில்லை. மகிழ்ச்சி தன்னிடமே தான் இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்தால் மகிழ்ச்சியை அவர்கள் தேடவேண்டிய அவசியம் குறைவு.

ஞானிகள், உதாரணம் ஒன்றைக் கூறுகிறார்கள். நாய் ஒன்று எலும்பைக் கடிக்கும் போது அதிலிருந்து கசியும் ரத்தத்தை ஏதோ அந்த எலும்பில் இருந்து வருவதுபோல் நினைத்து சுவைக்குமாம். உண்மையில் தன வாயில் இருந்து வெளிவரும் ரத்தம்தான் அது என்று அந்த நாய்க்குத் தெரியாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
14.07.2012 14.07.2012

அதுபோல் வேறு எதிலோ - யாரி டமோ கிடைக்கும் மகிழ்ச்சி, உண்மையில் தன்னிடம் இருக்கும் மகிழ்ச்சிதான் என்பது மனிதர்களுக்குத் தெரிவதில்லை பொருள்கள், மனிதர்கள் மூலமாய் மகிழ்ச்சி கிடைக்கும் என்று மகிழ்ச்சிக்காக அவற்றைச் சார்ந்திருப்பவர்கள், அவற்றின் மூலம் தங்கள் மகிழ்ச்சி குறையவும் கூடும் என்பதை உணர வேண்டும். அது கிடைத்தால் - அது நடந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன் என்பது ஒரு மாயை. நடப்பதிலும் கிடைப்பதிலும் மகிழ்ச்சிக்கு எதிரான அம்சமும் இருக்கலாம். இந்த நிமிடத்துக்கு ஒன்று மகிழ்ச்சியைத் தருகிறது என்றால், அடுத்த நிமிடத்தில் அது மகிழ்ச்சிக்கு எதிரானதாகவும் மாறலாம். நாமாக நம் மகிழ்ச்சியைக் காப்பாற்றிக் கொள்வதில்தான் வெற்றி இருக்கிறது.

மகிழ்ச்சியாக இருப்பதற்குப் பெரும்செல்வம், பெரிய பங்களா, கார் போன்றவை எல்லாம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. யார் வேண்டுமானாலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். அதற்குத்தேவை மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்ற மன உறுதி தான். மகிழ்ச்சி தான் முக்கியம் என்று கருதுபவர்களுக்கு மனத்தைக் கட்டுப்படுத்தும் பழக்கமும் வந்துவிடும். குறிப்பிட்ட சில விடயங்களால் அல்லது பிரச்சினைகளால் மகிழ்ச்சி குறையும் என்பதை நடைமுறை ரீதியாக ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். சராசரி மனிதர்கள் எல்லாம் தவஞானிகள் அல்லர். ஆனால், இது நீங்கலாகப் பார்க்கும்போது யார் யார் மகிழ்ச்சியாக இருக்க முடியாது என்பதை ஒரு பொதுப்பார்வையாகப் பார்த்தால் அது பயனுள்ளதாக இருக்கும்.

மற்றவர்களைத் தேவையில்லாமல் ஆராய்பவன் தன்னுடைய மகிழ்ச்சியைக் கெடுத்துக்கொள்கிறான். மற்றவர்களுக்கு ஏதாவது கிடைத்தாலோ அல்லது யாராவது கொடுத்தாலோ, அதைப் பொறுக்க முடியாதவனுக்கு மகிழ்ச்சி போய்விடுகிறது. கிடைத்ததிலும் இருப்பதிலும் திருப்தி அடையாத குணம் உள்ளவனுக்கு மகிழ்ச்சியும் நிலைக்காது அணுஅணுவாக எதிர்பார்ப்புக்களை வளர்த்துக்கொள்பவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. ஏனென்றால்,ஏமாற்றம், தோல்வி என்று வரும் போது அவர்கள் மனத்தின் சமநிலை கெட்டுப்போகும்.

தத்துவ மனப்பான்மை இல்லாதவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்றுக்கொண்டு, வருவதையும் நடப்பதையும் பார்வையாளனாகப் பார்க்கும், பக்குவம் தத்துவ மனப்பான்மை கொண்டவர்க்கு உண்டு

பிறர் பேசுவதையும் செய்வதையும் யதார்த்தமாக எடுத்துக்கொள்ளும் தன்மை எவ்வளவு குறைவாக உள்ளதோ,அந்த அளவுக்கு மகிழ்ச்சியும் குறையும். மனத்தையும் பேச்சையும் கட்டுப்பாடாக வைத்துக்கொள்ளத் தெரியாதவர்கள் அவ்வப்போது மகிழ்ச்சியை இழக்க நேரிடும்.

மனித உறவுகள் விடயத்தில் கவனமும் விழிப்புணர்வும் இல்லாது போனால் மகிழ்ச்சியை இழக்க நேரிடும்.

மற்றவர்களிடம் குறை அல்லது பிழைகாண்பதை ஒரு வழக்கம் ஆக்கிக் கொள்பவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது.

மற்றவர்களின் விமர்சனங்களை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சரியான அணுகுமுறையைக் கற்றுக் கொள்ளாதவர்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அளவுக்கு மீறி விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் கவலையைத்தான் வளர்ப்பார்கள்.மிகையான கோபமும் வெறுப்பும் யாரிடம் இருக்கின்றனவோ அவர்கள் மகிழ்ச்சியைத் தியாகம் செய்ய வேண்டியதுதான். மேற்கூறியவை குறிப்பிட்ட சில உதாரணங்களே. மகிழ்ச்சிக்கு எதிரானவற்றை அடையாளம் கண்டு அவற்றை ஒதுக்கினால் உண்மையான மகிழ்ச்சி என்னும் ஒளி தெரியும். எங்கிருந்தோ வருவது மகிழ்ச்சி என்று நினைப்பவர்களுக்கு அது எட்டாக் கனியாகத்தான் இருக்கும். எனவே மனமே மகிழ்ச்சியின் விளைவிடம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**வி.எஸ். ஸ்ரீதரன்**



கிட்டத்தட்ட முன்னொரு காலத்தில் என்ற தொனியுடன் தான் பல காலமாக பயணப்பட்டுக் கொண்டு வந்தது. இந்த நடை இன்று உடைக்கப்பட்டு துரித கதியில், எளிய சொற்கள் கொண்டு, சின்ன சின்ன சம்பாசணைகளில் கதை சொல்லும் உத்தி பெருகின் கொண்டு வருகிறது. ஒரு பெண்ணை அல்லது ஆணை வர்ணித்தும் அவர்களை ஓவியமாகத் தீட்டியும் வாசகர் மனதில் ஒரு தோற்றத்தை உண்டு பண்ணாமல் அவர்களின் சம்பாசணையூடான அவர்களின் தோற்றத்தை வாசகர் மனதில் உருவாக்கும் பண்பு இன்று அதிகமாக காணப்படுவது. ஒரு வாசகனின் கற்பனைத்திறனுக்கு ஏற்ப கதையின் நாயகன் அல்லது நாயகி வாசனுக்குள் உருப்பொருகின்றாள். அது மிக ஆரோக்கியமான நிகழ்வாகும்.

புதிய கருப்பொருள்கள், புதிய வடிவங்களுடன் சேர்ந்து உடற்கூற்றியலை உவமான உவமேயங்களாகப் பயன்படுத்தும் எழுத்து நடையும் கவிதைகளில் அதிகம் பாவிக்கப்படும் தன்மை இன்றைய இலக்கியத்தில் இடம் பெற்றுக் கொண்டு வருகிறது. அவ்வாறே நதிமூலம் ரிசிமூலம் என இருந்த பல இல்லற உறவுகள் மஞ்சள் பத்திரிகைகளில் இருந்து தாவி வெள்ளைத்தாள்களில் பதிவு செய்யப்படுகிறன.

கணனியுகம் என்பது இன்றைய நூண்றாண்டில் மனித குலத்தில் மாற்றிவைத்திருக்கம் ஒரு சுனாமி என்று சொன்னால் மிகையாகாது. பல பள்ளங்கள் மேடாகியிருக்கின்றன. அதே வேளை பல மேடுகள் பள்ளங்களாகியுள்ளன. இதில் குறிப்பிடப்படவேண்டியது கணனிகளில் வலம் வரும் எண்ணனற்ற இலக்கியப் பத்திரிகைகள் ஆகும். நூல் வடிவில் தமது படைப்புகளை கொண்டுவர இயலாதவர்களுக்கு அதனை கால காலத்திற்கு பதிவு செய்தும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் இந்த வடிவம் உதவுகின்றன.

இந்த கணனியின் வேகத்தில் கைக்குள்ளேயே முழு உலகமும் அடங்கி விட்ட நிலையில் தனி மனித வாசிப்புக்குரிய நேரம் மிக மிகச் சுருங்கி விட்டது. அல்லது வாசிப்பின் நேரத்தை பேஸ்புக்ஸ, ருவிற்றர், யுரியூப் என பல காரணிகள் களவாடி விட்டது என்பது உண்மை. மிக வேகமாக உருண்டு செல்லும் 21ஆம் நூற்றாண்டில் கலாசாரத்தின் முட்களுடன் போட்டிபோட்டு ஓடும் மக்களின் வாழ்வில் ஆரோக்கியத்தைப் பற்றி கவலைப்படாது வீதியோரத்தில் வாங்கி உண்ணும் மக்டொனால்ஸ் உணவுபோல ஆரோக்கியமற்ற ஒரு பக்க இரு பக்க ஒரு நிமிடக் கதைகள் என சஞ்சிகைகளின் பக்கங்களை நிரப்பும் குறைப்பிரவசமான இலக்கியவடிவங்கள் பயத்தை தருகின்றன. படைப்பும் வாசிப்பும் ஒரு வண்டியின் இரு சக்கரங்கள் போல. வாசிப்பில்லாத படைப்புகள் வண்டியின் குடையைச் சாய்த்து விடும் என்ற அச்சத்தின் குரல்கள் ஆங்கேங்கே கேட்கத் தொடங்கி இருக்கின்றன கொலை வெறிப் பாடலுக்கு எழும் அச்சங்கள் போல.

**இன்று – நாளை**

இவ்வாறான இன்றைய ஆரோக்கியமானதும் ஆரோக்கியமற்றதுமான இலக்கியங்கப் பிரசவங்களின் இடையே இலக்கியக உலகத்தை பயப்பிடுத்திக் கொண்டிருப்பது இலக்கியவாதிகளுக்கு அளிக்கப்படும் விருதுகள், அல்லது அவற்றைப் பெறுதலில் இலக்கியவாதிகளுக்குள் நிலவும் ஆரோக்கிமற்ற போட்டிகள் இன்னும் இத்தியாதி இத்தியாதிகள். என்றும் இல்லாதவாறு மிகச்சிறிய விருதில் இருந்து சாகித்ய மற்றும் ஞானபீட விருதுகள் வரை எவர்க்கு எந்த விருதுகள் அளிக்கப்படும் பொழுது அதற்குப் பின்னால் ஒரு சொல்லப்படாத ஒரு சேதி இருப்பதும் அது பின்னால் வெளியாவதும் இன்று அடிக்க நடந்து கொண்டு வருகின்றது.

எதற்காக இந்த அவரசங்கள்? இந்த அங்கீகாரங்கள் உங்களுக்கு எதனைப் பெற்றுத் தந்து விடப் போகின்றது. வாழ்நாள்சாதனையாளர் விருதைத் தவிர மற்றைய எந்த விருதும் அளிக்கப்படும் பொழுதும் எந்த புனைவு இலக்கியத்திற்கு ஒரு பரிசு கொடுக்கப்படுன்றதோ அந்த புனைவு இலக்கியம் ஒரு சாதாரண வாசகனை நெகிழப் பண்ண வேண்டும். மற்றைய எழுத்து வடிவங்களை பல் கலைக்கழகங்கள் அங்கீகரிக்கும் தரத்தை எட்டியிருக்க வேண்டும். அவ்வாறில்லாத படைப்புகள் எத்தனையோ பரிசுகள் பெறும் பொழுதுதான் எதிர்காலத்தைப் பற்றிய இலக்கியப் பயம் வருகின்றது. பரிசு பெற்ற தரம் குறைந்த ஒரு நூல் ஒரு வாசகனுக்கு உந்துணர்வைக் கொடுக்குமாயின் அவனின் எதிர்காலப் படைப்புகளும் அதே தரத்தில் தான் இருக்கும். காலத்தால் அழியாத படைப்புகள் என்பது விருதுகளால் தீர்மானிக்கப்படுவதில்லை என மீண்டும் மீண்டும் இலக்கிய உலகத்தினருக்கு யாரோ ஒருவர் இடித்துரைத்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் நாளைய இலக்கிய உலகு இன்றையதை விடவும் இன்றும் சிறப்பாக மிளிரும். இனியும் மேலைநாட்டு இலக்கியங்களையும் இலக்கிய கர்த்தாக்களையும் முன்னுதாரணங்களாகப் பார்க்காமல் அவர்கள் எங்கள் கீழைத்தேய படைப்புகளை பார்க்கும் வகையில் எங்கள் இலக்கியப் பயணங்கள் அமையவேண்டும். மேலைத்தேயங்களுக்கு எங்கள் கணனியின் அறிவு இன்று பயன்பெறும் பொழுது, தினம் தினம் எயர் லங்காவிலும் எயர் இந்தியாவிலும் மூளைகள் ஏற்றுமதி யாகும் பொழுது ஏன் எங்களால் நல்ல இலக்கியங்களை உருவாக்க முடியாது.

மேலைநாடுகளில் எழுத்து என்பது முழுநேரத்தொழிலாக அங்கீகரிக்கப்பட்டருக்கிறது. அதற்குரிய வருமானம் அரச நிறுவனங்களால் அளிக்கப்படுகின்றது என்ற வாதங்கள் எல்லாம் முன் வைக்கப்படுகின்றது. ஆனால் பாரதிக்கு யார் சம்மானம் கொடுத்தது? வறுமையின் பிடியில் இருந்த வீட்டில், உணவு ஆக்குவதற்கு வைத்திருந்த ஒரு சிறங்கை அரிசியை எடுத்து குருவிகளுக்குப் போட்டு விட்டு அதன் அழகைப் பார்த்து கவி எழுதியவன் தானே அவன்? அரசியலுக்கு விலைபோகாத சுயமும், தன்னம்பிக்கையும், யதார்த்தமும், நேர்மையும் எழுத்திலும் எழுதுபவன் வாழ்விலும் இருந்தால் கனதியான இலக்கியங்கள் பிறக்கும் எண்பதில் ஐயமில்லை.

*நாளை அது முடியும்!*
*எம்மேல் நாமே நம்பிக்கை வைத்தால்!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயல்மொழி அறிவு அவசியமான ஒன்றா?

**இ**லக்கணச் செறிவும் இலக்கிய வளமும் பெற்ற பல மொழிகள் பன்னெடுங்காலமாக நம் நாட்டில் வழங்கி வருகின்றன. ஆங்கிலேயர் ஆட்சியால் நம் நாட்டிற்குள் நுழைந்த ஆங்கில மொழி நம் கல்வி, சமூக,பொருளாதார, அரசியல் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. இத்தகையதொரு சூழலில் பிற அயல்மொழிகளை ஏன் கற்க வேண்டும்? அதனால் விளையும் பயன் என்ன? போன்ற கேள்விகள் எழுதல் நியாயம்தானே!

கடந்த சில ஆண்டுகளில் நம் நாட்டில் அயல்மொழிகளைக் கற்றிடும் ஆர்வம் பெருமளவிற்கு அதி-கரித்துள்ளது. பிரெஞ்சு, ஜேர்மன், ஜப்பானிய மொழிகளை மாண-வரும் பிறரும் அதிக எண்ணிக்கையில் படிக்கத் தொடங்கியுள்ளனர். இவ்வார்வப் பெருக்கிற்கு இரண்டு முக்கியக் காரணங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன:

முதலாவது, கடந்த பல ஆண்டுகளாக அயல்நாடுகளுக்கு மேற்படிப்பிற்காகச் செல்ல விரும்பும் மாணவர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துக் கொண்டிருந்தது அமெரிக்கா மட்டுமே. இந்நிலை தற்போது வெகுவாக மாறியுள்ளது. மாணவர்கள் மேற்படிப்பிற்காகக் கணிசமான எண்ணிக்கையில் ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்குச் செல்கின்றனர்.

இரண்டாவது, தகவல் தொழில் நுட்பத்திலும், கணிப் பொறித் துறையிலும் நம் நாட்டவர்கள் அதிகம் ஈடுபாடு காட்டுவதால் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெறுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.பல பன்னாட்டு நிறுவனங்களும் தங்கள் உற்பத்தி மையங்களையும் அலுவலகங்களையும் நம் நாட்டில் திறந்த வண்ணம் உள்ளன.


இச்சூழலில் அயல் மொழிகளில் ஒருவர் பெற்றுள்ள அறிவும் தேர்ச்சியும் அவருக்கு மிகவும் சாதகமாக அமைகின்றன.

அயல்மொழிகளில் நாம் பெறும் தேர்ச்சி நமக்கு நல்ல வேலை தேடித்தரவும் வெளிநாட்டில் பயிலும் வாய்ப்பினைப் பெற்றுத் தரவும் மட்டும் உதவுவதன்று. அது நம் சிந்தனையை வளப் படுத்தவும் அறிவை விரிவு செய்திடவும் நம் பார்வையை விசாலமாக்கிடவும் உதவுவதாகும். மொழி அறிவிற்கும் அறிவு வளர்ச்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. நாகரிகம் தொடங்கும் முன்பு மக்களுக்குப் புலன்கள் வளர்ந்திருந்தன் ஆயினும் அக் காலத்து மக்கள் அறிவு வளர்ச்சி பெறவில்லை. பேசக் கற்றுச் சொற்களைப் படைத்துக் கொண்ட பிறகே அறிவு வளரத் தொடங்கியது. இங்ஙனம் பல மொழிகளை நாம் கற்றுத் தேறும்போது நம்முடைய அறிவும் மேன்மையுறும் என்பது நிச்சயம்.

அயல்மொழிகளைக் கற்பதென்பது எந்த வகையிலும் நம் தாய்மொழியை மறப்பதாகாது. பிற மொழிகளைக் கற்கும்போது நம்முடைய மொழி நமக்கு நன்கு புலனாவதைப் பிற மொழிகளைப் பயின்றோரும் பயில்வோரும் நன்கறிவர். பிரெஞ்சு, சம்ஸ் கிருதம், இந்துஸ்தானி,ஆங்கிலம் போன்ற மொழிகளைக் கற்றுப் பெற்ற தெளிவின் காரணமாகத் தம் தாய்மொழியின் மேன்மை உணர்ந்த மகாகவி பாரதி, "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" எனப் பறைசாற்றினான்.

அயல்மொழி அறிவு தமிழர் வகுத்த உயரிய கோட்பாடான "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதனை மெய்ப்பிக்க வல்லதாகும். அயல் மொழிகளைக் கற்பதன் மூலம் பிற பண்பாடுகளை நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் அப் பண்பாடுகள் குறித்து நிலவி வந்த பல தவறான எண்ணங்களும், மதிப்பீடுகளும் மறைந்து நல்லிணக்கம் மேலோங்குகிறது.

**எஸ்.சாந்தினி**
**கிளிநொச்சி.**



# பெண்களே உங்களுக்காக...

**சி**ல பெண்களுக்கு எத்தனை வயசானாலும் தோல் சுருங்காது. வழவழவெனச் சின்னப் பெண்ணைப் போலவே இருக்கும்!

தோல் வறட்சி, கட்டம் கட்டமாகத் தோலின்மீது மெலிதான வெடிப்பு எதுவுமில்லாத பட்டுப் போன்ற மேனி வேண்டுமா?

"ம்...ஹும், அதுக்கெல்லாம் கொடுத்து வைக்கணும்பா" - இப்படி ஏக்கப் பெருமூச்சு விடுகிறீர்களா?

அம்மணி.... பொறுங்கள். இதைப் படியுங்கள் முதலில்!

**தண்ணீர் மருந்து**

"தண்ணி கிடைக்காத காலத்துல மருந்து மாதிரிதான் தண்ணியைக் குடிக்க வேண்டியிருக்கு" - நீங்கள் முனங்குவது காதில் விழுகிறது.

ஆனால், ஒரு நாளைக்கு ஒன்றரை லிட்டர் முதல் இரண்டு லிட்டர் தண்ணீர் அருந்துபவர்களுக்கு வயிற்றுப் பிரச்சினை அவ்வளவாக வருவதில்லை! வயிறு நலமாக இருந்தால், நமது உடம்பின் சருமமும் சுத்தமாக இருக்கும்.

**எலுமிச்சை உடம்புக்கு நல்லது!**

குளிப்பதற்கு முன் - ஒரு வாளித் தண்ணீரில் ஒரு மூடி எலுமிச்சையைப் பிழிந்து கொள்ளுங்கள். சோப்பு தேய்த்துக் குளித்த பின், கடைசியாக ஒரு "லெமன் பாத்" எடுங்கள் (எலுமிச்சை சாதமில்லீங்க... குளியல்).

இதன் புத்துணர்வையும் சரும மினு மினுப்பையும் அனுபவித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

**தேமலை விரட்டுங்க!**

மருந்துக் கடைகளில் கார்போக அரிசி என்று கேட்டால் தருவார்கள். இதைப் பொடி செய்து, மெல்லிய துணியில் சலித்து, ஒரு டப்பாவில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். தினமும் இதில் கொஞ்சம் எடுத்துத் தண்ணீர் விட்டு பேஸ்ட் மாதிரி செய்து தோலில் தடவுங்கள். விரைவில் தேமல் இருந்த இடம் தெரியாமல் போகும்!

**மெருகுக்கு பப்பாளி!**

நன்கு பழுத்த பப்பாளியை நறுக்கி, மிக்ஸியில் போட்டு அடித்து, அத்துடன் ஒரு மூடி எலுமிச்சை சாறை விட்டுக் கலந்து, உடம்பில் தேய்த்து, ஒரு மணி நேரம் போல ஊறியபின் குளிக்கலாம்.

இவ்வாறு செய்து வந்தால் பட்டுப்போன்ற மேனியை நீங்கள் பெறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்.ஜோன்ஸ் பாடசாலைக்கு விஜயம் செய்தபோது



சென்.ஜோன்ஸ் பாடசாலை மாணவ, மாணவிகளோடு எஸ்.கே. கிருஷ்ணா



அந்தோனியர் திருவிழாவை முன்னிட்டு அன்னதானம் வழங்கும்போது



மதகுருமார்கள் அன்னதான நிகழ்வை ஆசிர்வதித்தபோது

# நவோதய அமைப்புகளின் நிகழ்வுகள்



மணல் தோட்ட மக்கள் சந்திப்பின்போது



மணல் தோட்ட மக்கள் சந்திப்பின்போது



வீதி விபத்தில் பிள்ளையை இழநத பெற்றோர்களுக்கு
நிதி உதவி வழங்கிய போது (அந்தோனியார்)



சரிகம இசைக்குழுவின் தலைவர் கருணாவினால்
கௌரவிக்கப்படும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org